விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள் : இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 04 திங்கட்கிழமை (19.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 336

ராம்கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## அமெரிக்காவின் கவனம் மீண்டும் இலங்கை மீது!

### ஒபாமா தெரிவின்பின் வருகிறார் உயரதிகாரி

(நியூயோர்க்)

**அமெரிக்காவின் அதிபராக ஒபாமா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உயரதிகாரியொருவர் முதன்முறையாக இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.**

**இலங்கையின் மனிதவுரிமைகள் கேள்விக்குறியாகிய நிலையில் இவரது கொழும்பு விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.**



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவி செயலாளராகவுள்ள றொபேட் ஓ பிளேக்கிற்கு அடுத்த நிலையில் உள்ள பிரதி உதவி செயலாளர் அலிஸ்ரா ஜரிஸ் என்ற அதிகாரியே இந்தவாரம் கொழும்பு வரவுள்ளார்.

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான பணிகளை இலங்கை முன்னெடுக்கிறதா என்பதை ஆராயவே அவர் கொழும்பு வரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை மீது தற்போது வெளியாகியுள்ள ஐ.நாவின் உள்ளக அறிக்கை மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் இறுதியுத்த விசாரணை வலியுறுத்தல் என்பன பலமாக தாக்கம் செலுத்திவரும் நிலையில் அமெரிக்க அதிகாரி அலிஸ்ரா ஜரிஸின் விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## ஐ.நா.அறிக்கைக்கு கனடா வரவேற்பு

(ஒட்டாவா)

இலங்கையில் யுத்தம் இடம்பெற்றபோது ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் வெளியிட்டுள்ள உள்ளக அறிக்கையை கனடா வரவேற்றுள்ளது.

இது தொடர்பில் கனடா வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் தெரிவிக்கையில்,

இலங்கை மக்கள் பல வருடங்களாக முகங்கொடுத்து வருகின்ற மனித உரிமை மீறல்களை இந்த அறிக்கை 'வெளிக்கொணர்ந்துள்ளது.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான (20ஆம் பக்கம் பார்க்க)

## மீசாலை பகுதியில் எலும்புக்கூடு மீட்பு

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர் ஒருவரின் எலும்புக் கூடு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து, மீசாலை பற்றைக்குள் இருந்து மேற்படி எழும்புக் கூடு பொலிஸாரால் மீட்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் இவ்வெலும்புக்கூட்டினை மீட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று மாலை 5 மணியளவில் உடற்கூற்று பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர்.

கடந்த 10 மாதத்திற்கு முதல் மீசாலைப் பகுதியில் காணாமல் போனவரின் எலும்புக் கூடாக இது இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (ந-11)


## பட்ஜெட்டின் இரண்டாவது வாசிப்பு அரசியலமைப்பிற்கு முரணானது

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் நிறைவேற்றிய வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு அரசியலமைப்பிற்கு முரணானது என்று எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம்சாட்டியுள்ளார்.

வரவு செலவுத்திட்டத்திற்கு முன்னரான நிதியொதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற நிலையில் அதனை திருத்திய பின்னரே நாடாளுமன்றத்தில் சமர்ப் (20ஆம் பக்கம் பார்க்க)



## பரிதி கொலையில் இலங்கைக்கு தொடர்பு இல்லை-உயர் ஸ்தானிகர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதிகளில் ஒருவரும் பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பொறுப்பாளருமான பரிதி என்றழைக்கப்படும் நடராஜா மதீதரனின் கொலைக்கும் இலங்கைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று பிரான்ஸுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

அத்துடன், பரிதியின் கொலைக்கும் இலங்கைக்கும் தொடர்பிருப்பதாக பிரான்ஸின் பெரிஸியன் பத்திரிகை கடந்த 13-ம் திகதி வெளியிட்டுள்ள செய்திக்கும் மறுப்புத் தெரிவித்துள்ள உயர்ஸ்தானிகர், அச்செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பிரான்ஸ் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பரிதியைக் கொலை செய்தால் 50 ஆயிரம் யூரோவுடன் (86 லட்சம் ரூபாய்) இலங்கைக்கான விமானச் சீட்டொன்றும் வழங்குவதாக பிரான்ஸிலுள்ள இலங்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## மக்களை நிர்க்கதியாக்கிவிட்டு மனிக்பாமில் மரம் நடுவதா?

### இராணுவத்தைக் கண்டிக்கிறது த.தே.கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடக்கே போரினால் இடம்பெயர்ந்தவர்கள் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டிருந்த, வவுனியா செட்டிக்குளம் மனிக்பாம் முகாம் பகுதியில், தேசத்திற்கு நிழல் என்னும் தேசிய மட்டத்திலான மரநடுகை திட்டத்தின் கீழ், இராணுவத்தினர் பழமரச் செய்கையில் ஈடுபட்டிருப்பது குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவலை வெளியிட்டிருக்கின்றது.

இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் அங்கிருந்து மீள்குடியேற்றத்துக்காகவும், வேறிடங்களில் குடியேற்றப்படுவதற்காகவும் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, மனிக்பாம் முகாமை இராணுவம் தனது பொறுப்பிலேயே வைத்திருக்கின்றது.

இந்தக் காணிகளில் இராணுவத்தினர் காய்கறிச் செய்கையிலும் ஈடுபட்டிருப் பதாகத் தெரி (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசரின் கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவின் கோரிக்கையை பாராளுமன்றத் தெரிவுக்குழு நிராகரித்துள்ளது.

நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்த விசாரணைகளில் ஆஜராகுவதற்கு மூன்று வார கால அவகாசம் வழங்குமாறு பிரதம நீதியரசர் சட்டத்தரணியின் ஊடாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் கோரியிருந்தார்.

எனினும், இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.மனித உரிமை பேரவையில் நட்பு நாடுகளின் பெயர் நீக்கம்!

### நெருக்கடிக்குள் இலங்கை

(நியூயோர்க்)

ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கையின் நட்பு நாடுகள் சுழற்சி முறையில் நீக்கப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கு புதிதாக 18 உறுப்பு நாடுகளைத் தெரிவு செய்வதற்கு நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் அதிகப்படியான வாக்குகளுடன் அமெரிக்கா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவை தவிர, ஜேர்மனி, அயர்லாந்து, ஆஜென்ரீனா, பிறேசில், ஐவரிகோஸ்ட், எஸ்தோனியா, எதியோப்பியா, காபோன், ஜப்பான், கசாகிஸ்தான், கென்யா, மொன்ரனிக்ரோ, பாகிஸ்தான், தென்கொரியா, சியராலியோன், ஐக்கிய அரசு எமிரேட்ஸ், வெனிசுவேலா ஆகிய நாடுகளும் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவைக்குத் தெரிவாகியுள்ளன.

இலங்கையின் (20ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக்குற்றச்செயல்களுக்கு சர்வதேச விசாரணை அவசியம்

### இந்திய கம்யூனிஸ்ட் கோரிக்கை

(சென்னை)

இலங்கை யுத்தக்குற்றச் செயல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என இந்திய கம்யூனிஸ்கட்சி கோரியுள்ளது.

யுத்த குற்றச் செயல்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்த சர்வதேச பொறிமுறைமையொன்று உருவாக்கப்பட வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான மாற்றத்தை ஏற்படுத்த இந்திய மத்திய அரசாங்கம் குரல் கொடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழுக்காற்றுக் குழுவில் முறையிடலாம்

## அமைச்சர் மைத்திரிபால தகவல்

சுகாதாரத் துறை அமைச்சகத்தின் கீழ் செயற்படும் நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளில் இடம்பெறுகின்ற பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக ஒழுக்காற்றுக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மருத்துவமனைகள் உள்ளிட்ட சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் அமைப்புகளில் அதிக பாலியல் வன்முறைகள் இடம்பெறுவதால், இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வாராந்தம் 8 தொடக்கம் 10 வரையான துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகின்றதாக அறியக் கிடைத்துள்ளது.

ஒழுக்காற்றுக் குழுவிடம் முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகளின்,அடிப்படையில் இரகசிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ந-11)

# வீட்டுக் காணியில் வெடிபொருள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் பாடசாலை வீதியில் அமைந்துள்ள வீட்டுடன் கூடிய காணியில் வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று மாலை 3 மணியளவில் குறித்த காணியில் உரப் பையில் சுற்றப்பட்ட நிலையில் இக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்டவற்றில் 2 கைக்குண்டு, 2 துப்பாக்கி ரவைகள் கூடிய செற் மற்றும் வெடிகுண்டுகள் 3 என்பனவும் இதில் அடங்கும்.

காணியினைத் துப்புரவு செய்யும்போது மேலே வெடிகுண்டு தென்பட்டதை அடுத்து உடனடியாக கூழாவடி இராணுவ முகாமுக்கு வீட்டு உரிமையாளரினால் தகவல் கொடுக்கப்பட்டது.

உடனடியாக அங்கு விரைந்த இராணுவத்தினர் அக்குண்டுகளை மீட்டு எடுத்து சென்றனர்.(ந-4)

# உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு கௌரி சேதுராஜாவே அதிபர்

## வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கரவெட்டி)

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் அதிபராக திருமதி கௌரி சேதுராஜாவே பதவி வகிப்பார் என்று வடமராட்சி வலயக் கல்வி நிர்வாக அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் நேற்று தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் நியமிக்கப்பட்ட குறித்த அதிபருக்கு எதிராக பாடசாலையின் மாணவர்களின் சில பெற்றோர்கள் கடந்த புதன்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆனால் பாடசாலையின் முழுச் சமூகத்தினரும் அதிபர் நியமனத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

தற்போது உள்ள அதிபர் சிறந்த அனுபவமும், ஆளுமையும் உள்ளவர். அதிபர் சேவை தரம் 2இல் உள்வாங்கப்பட்டுள்ளார். எனவே அவரே அதிபராக பதவி வகிப்பார் என்று தெரிவித்தார். (ந-3;24)

# சரசாலை மேற்கில் மர்மபொருள் வெடிப்பு

## இளைஞர் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

காணிக்குள்ளிருந்த பற்றைகளை வெட்டி எரித்தபோது திடீரென வெடித்த மர்மப் பொருளினால் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி சரசாலை மேற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் அப்பகுதியைச் சேர்ந்த கந்தசாமி எழில்கரன் (வயது 21) என்ற இளைஞனின் முகத்திலும் கைகளிலும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்றதும் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட குறித்த இளைஞன் பின்னர் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டார்.

இதுதொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-6)

# மாணவ முதல்வர் தினம்

யாழ்.மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையின் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை சிரேஷ்ட மாணவ முதல்வன் எஸ்.ஞானவேல் தலைமையில் கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ் மாணவ முதல்வர் சபையின் நிகழ்வில்; புதிய மாணவர்களுக்கான சின்னம் சூட்டல் நிகழ்வும் மாணவ முதல்வன் புத்தக வெளியீட்டு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ந-21)

# சூர சங்காரம் நேரடி அஞ்சல்

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை மாலை நடைபெறவுள்ள சூரசங்கார நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். எவ்.எம்.வானொலி நேரடி அஞ்சல் செய்யவுள்ளது.

அத்துடன் தாவடி அம்பலவாணர் முருகமூர்த்தி ஆலயத்திலும் சூரசங்கார நிகழ்வுகள் நேரடி அஞ்சல் செய்யப்படவுள்ளது.

இந்நேரடி அஞ்சல் நேர்முகவர்ணனை நிகழ்வுகள் மதுரகவி காரை எம்.பி அருளானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.(ந-9)


- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

24

Nov 2012-Apr 2013

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.11.2012

(C-1467)



ஆசிரியர் முத்துலிங்கத்தின்
EASY ENGLISH
விபரங்கள் + பெயர்பதிவு : 773212711 மூலம்



செல்லா சினிமா யாழ்ப்பாணம்






விஜய், காஜல் அகர்வால் மற்றும் பலர் நடிப்பில்
10.30, 2.30, 6.30, 9.30



தொடர்ந்தும் உங்கள் சேவையில்

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன் கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உடுபுடைவைகள், CD, VCD க்கள் அனுப்பவும், உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.No:-0212225392

(சி-1538)


# பெயர் சூட்டும் விழா

## அழைப்பிதழ்




யா/ திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு

## யா/பரமேஸ்வரா வித்தியாலயம்

எனப் பெயர் சூட்டும் நிகழ்வு

காலம் : 19.11.2012 (இன்று)
நேரம் : முற்பகல் 11 மணி
இடம் : யா/திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

தலைவர் : திரு.ந.விஜயசுந்தரம் (அதிபர்)

பிரதம விருந்தினர் : திரு.ச.சத்தியசீலன் (செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாணம்)

சிறப்பு விருந்தினர்கள் :

- திரு.ப.விக்கினேஸ்வரன் (பிரதிச் செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாணம்)
- திரு.வை.செல்வராசா (மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்)
- திரு.எஸ்.உதயகுமார் (வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
- திரு.ச.பேரின்பநாயகம் (ஓய்வுபெற்ற பிரதிப்பொலிஸ்மா அதிபர், தலைவர் - ப.மா.சங்கம், யா/பரமேஸ்வராக் கல்லூரி, கொழும்பு)

கௌரவ விருந்தினர்கள் :

- திரு.எஸ்.மாணிக்கராசா (கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்)
- திரு.கனக.நமநாதன் (சட்டத்தரணி, தலைவர் - ப.மா.சங்கம், யா/பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்)
- திரு.ச.முத்துலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், தலைவர்- இந்து வாலிபர் சங்கம், திருநெல்வேலி)
- திரு.வ.குலத்துங்கன் (செயலாளர் - ப.மா.சங்கம் , திருநெல்வேலி இ.த.க.பாடசாலை)

### நிகழ்ச்சிகள்

- இறைவணக்கம்
- மங்கள விளக்கேற்றல்
- மங்கள இசை
- பெயர் சூட்டல் : பிரதம விருந்தினர்
- வரவேற்புரை :
  திரு.த.கணநாதலிங்கம்
  (ஓய்வு பெற்ற பணிப்பாளர் சுங்கத் திணைக்களம்)
  சிரேஷ்ட உபதலைவர், ப.மா.சங்கம் - யா/பரமேஸ்வராக் கல்லூரி ,கொழும்பு
- ஆசியுரை : நல்லை ஆதீன குருமுதல்வர்
- தலைமையுரை
- விருந்தினர் உரை
- நன்றியுரை
  திரு.த.ஆனந்தநடராஜா
  (பா.அ.சங்கம் - யா/திருநெல்வேலி இ.த.க.பாடசாலை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நல்ல பார்வை

"என்ன சேர் உலகம் ... இவ்வுலகில் நடைபெறும் காரியங்கள் எதுவுமே சரியில்லை" என்று ஒருவர் கவலைப்பட கூறினார்.

" என்ன இது... இப்படி ஒரேயடியாக அலுத்துப் பேசுகிறீர்களே...? என்று கேட்டேன்.

" பின்னர் என்ன சேர்... நல்ல விடயமே கண்ணுக்கு புலப்படாது போலுள்ளது. அனைத்துமே பிரச்சினையாக இருக்கிறது...." என்றார் அவர்.

சரி....சற்று அமைதியாக இருங்கள். உங்களுக்கு ஒரு கதை சொல்லுகிறேன்... என்று ஆரம்பித்தார்

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அவருக்குத் திடீரென ஒரு நாள் தலை வலிக்க ஆரம்பித்து விட்டது.

ராஜா என்றால் தலைவலி வராதோ? பெரிய தலைவலியாக வந்துவிடும்.

அரண்மனையிலே வைத்திய வசதிக்கு என்ன குறைச்சல். நிறைய வைத்தியர்கள்; ஒவ்வொரு விதமான மருந்தைக் கொடுத்தார்கள். வலி குறையவில்லை. தலைவலிக்கு என்ன காரணம் என்பதை அவர்களால் சரியாக கண்டுபிடிக்க முடியவில்லை. அவரது வலி தொடர்ந்தது.

இது தொடர்பாக அமைச்சர் ஒருவர் ஆலோசனை வழங்கினார்.

" காட்டிலே ஒரு முனிவர் இருக்கிறார்... அவரை அழைத்து வந்து காட்டினால் ஏதாவது யோசனை சொல்லுவார்" என்றார்.

"சரி போய் அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்று ராஜா உத்தரவு போட்டார்.

சீடர்கள் முனிவரை அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

"மன்னா! மருந்து வகைகள் மூலமாக உன்னுடைய தலைவலியைக் குணப்படுத்த முடியாது. நீ எங்கே போனாலும் வந்தாலும் பச்சை வர்ணம் உன் கண்ணிலே தென்படுகின்ற மாதிரி பார்த்துக் கொள்- பச்சை நிறம். கண்ணுக்கு நல்லது. பச்சை நிறத்தை பார்த்துக்கொண்டிருந்தால் உன் தலைவலி பறந்து போய் விடும்-இதுதான் வைத்தியம்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

மறுநாள் அந்த ராஜா மந்திரிகளோடு ஆலோசனை நடத்தினார்.

அதன்பின்னர் அரண்மனை தொடக்கம் வீடுகள் வரை பச்சை நிறத்தில் வர்ணம் பூசப்பட்டது?. ஊரிலே உள்ளவர்கள் அனைவரும் பச்சை உடை அணியவேண்டும். பச்சை நிறத்தைத் தவிர வேறு எந்த நிறமும் ராஜா கண்ணிலே தென்படக்கூடாது என்று கடுமையான உத்தரவு அந்த ஊரிலே பிறப்பிக்கப்பட்டது.

சிறிது நாட்களிலே எந்தப் பக்கம் பார்த்தாலும் பசுமைப் புரட்சி- அப்படியாக அந்த ஊர் மாறியது.

காட்டுக்குச் சென்ற முனிவர் நாட்கள் கடந்த நிலையில் மறுபடியும் அரண்மனைக்கு வந்தார்.

வந்து பார்த்தால்... ஊர் பூராகவும் பச்சை நிறம் இது என்ன அதிசயம் என்று திகைத்துப் போனார்.

இவர் அரண்மனைக்குள் நுழைவதற்கு முன்னர் பெயிண்ட் வாளியோடு இருவர் ஓடி வந்தனர்.

" முனிவரே சற்று நில்லுங்கள். உடல் முழுவதும் பச்சை நிறம் அடிக்கவேண்டும் . அதன் பின்தான் நீங்கள் உள்ளே போகலாம்" என்றனர்.

முனிவர் திகைத்துப்போனார். "என்னடா இது... நமது யோசனை இந்த அளவுக்கு கொண்டு வந்து விட்டதே" என்றார்.

அதன் பின்னர் ஆசாமி ராஜாவை சந்தித்தார். அப்போது "அரசனே! உனக்கு இந்த பச்சை நிறத்தை பார் என்று கூறினால் இப்படியா அரசாங்க பணத்தை வீணடிப்பது? உன்னுடைய பார்வை மந்தமடைந்து விட்டதா? என்று அவர் கேட்டார்.

"அது எப்படி பார்வையை மாற்றிக் கொள்வது?" என்றார் அரசன்.

"ஒரு பச்சை நிற கண்ணாடியை அணிந்து கொண்டால் பார்ப்பது பூராகவும் பச்சையாகத் தெரியும். அதற்குப் போய் இவ்வளவு பணத்தை விரயமாக்கியுள்ளாயே? என்று முனிவர் கூறினார். இந்த உலகம் பூராகவும் நமது உள்ளுணர்வுகளின் வெளிப்பாடு தான் என்ற உண்மையை நன்றாகப்புரிந்து கொள்ள வேண்டும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# அனுமதிப்பத்திரமின்றிய பேருந்துகளுக்கு விரைவில் பயணத் தடை விதிக்கப்படும்

## கெமுனு விஜயரட்ன யாழில் நேற்று தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்லும் தனியார் பேருந்துகள் குறுகிய தூரம் பயணிக்கும் பயணிகளை ஏற்றுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்ததோடு அனுமதிப் பத்திரமின்றி பயணிக்கும் தனியார் பேருந்துகளுக்கு தடை விதிக்கப்போவதாகவும் இலங்கை தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன தெரிவித்துள்ளார்.

யாழ். பிராந்திய கூட்டிணைக்கப் பெற்றபஸ் கம்பனிகளின் இணையத்தில் தனியார் பஸ் உரிமையாளர்களுடன் நேற்று விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு, திருகோணமலை, வவுனியா, அனுராதபுரம் போன்ற வெளிமாவட்டங்களுக்கு பயணிக்கும் பேருந்துகள் இடைவெளியில் குறுகிய தூரம் பயணிக்கும் பயணிகளை ஏற்றிச் செல்வதனால் உள்ளூர் பயணத்திற்காக விடப்பட்டுள்ள பேருந்துகளில் பயணிகள் செல்வது குறைந்து வருகின்றது. இதனால் பல பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

எனவே, அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பிறமாவட்டங்களுக்குப் பயணம் செய்யும் பேருந்துகளில் குறுந்தூரப் பயணிகளை ஏற்றுவது தடை செய்யப்பட்டுள்ளதோடு இதனைச் சகல தனியார் பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் பின்பற்ற வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அநேகமான பேருந்துகள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வழித்தட அனுமதியில்லாமல் சேவையில் ஈடுபடுகின்றன. இவை தொடர்பாக பொலிஸ் துறையினருடன் இணைந்து இரண்டு வார காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, அனைத்துப் பேருந்து உரிமையாளர்களும் சட்டத்தைக் கையில் எடுத்து மோதல்களில் ஈடுபடாமல் சிறந்த முறையில் பொது மக்களுக்கான சேவையை நடத்த வேண்டும்.

பயணிகள் சேவையில் ஈடுபடும் சாரதிகள், நடத்துநர்கள் சேவையின் போது கைத்தொலைபேசி பாவிப்பது, தாம்பூலம் தரிப்பது, புகைபிடிப்பது, மது போதையில் கடமையில் ஈடுபடுவது உட்பட முகச்சவரம் செய்யாதும் சாரதி, நடத்துநர் அனுமதிப்பத்திர இலக்கங்களைக் காட்சிப்படுத்தாது ஈடுபடுவோர் மீது இனிவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் பஸ் உரிமையாளர்கள் சீருடை அணிவதும் பஸ்களுக்கு உரிய வர்ணப்பூச்சினை நடைமுறைப்படுத்துவதும் அவசியம். அதற்கான ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்படும்.

சீருடை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்து தரப்படும் எனத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி பெரேரா, சிரேஷ்ட பொலிஸ் அதி காரி ரணவீர, யாழ். தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேரா மற்றும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ந-6-15)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 150 |
| உருளைக்கிழங்கு | 80 | 100-120 | 110 |
| பச்சைமிளகாய் | 150 | 170 | 220 |
| தக்காளி | 80 | 90 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 100 | 120 | 120 |
| கரட் | 100 | 120 | 160 |
| பூசணி | 60-70 | 60 | 60 |
| புடோல் | 90 | 90 | 80 |
| வாழைக்காய் | 60-70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50-60 | 70 | 80 |
| பயற்றங்காய் | 200 | 200 | 170 |
| லீக்ஸ் | - | 110 | 120 |
| பீற்றூட் | 100 | 160 | 140 |
| கறிமிளகாய் | 220 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 120 | 160 | - |
| போஞ்சி | 170 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 170 | 150 | 100 |
| கீரை - 1 பிடி | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 150 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 | 30-35 |

# இராசி பலன்

*19.11.2012*
*கார்த்திகை 04, திங்கட்கிழமை*
*சூரிய உதயம் காலை 6.09 மணிக்கு*
*சஷ்டி பிற்பகல் 3.47 மணிவரை*
*உத்தராடம் காலை 6.49 மணிவரை*
*திருவோணம் பின்னிரவு 6.00 மணிவரை*
*இராகுகாலம் 7.39- 9.09 மணிவரை*
*சுபநேரம் 12.09-1.39 மணிவரை*
*ஸ்கந்த சஷ்டி விரதம்*

**மேடம்** பொதுவாழ்வில் புகழ் கூடும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், கந்தன் வழிபாடு காரிய வெற்றி தரும், நண்பர்கள் வலிய வந்து உதவுவர், ஆரோக்கியமான நாள், போசன நன்மையுண்டு.

**இடபம்** ஆன்றோர் சந்திப்புண்டு, செய் தொழில் சிறப்புகள் வந்து சேரும், மனக் குழப்பம் அகன்று மனதில் இனம் புரியாத சந்தோசம் குடி கொள்ளும், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மிதுனம்** பேச்சில் நிதானம் தேவை, பயணங்களின் போது விழிப்புணர்ச்சி தேவை, ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கூறலாம்.

**கடகம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், உங்கள் கருத்துக்கு நல்ல மதிப்பு கிடைக்கும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி காண்பீர்கள்.

**சிங்கம்** வழிபாட்டின் மூலம் வளர்ச்சி காணவேண்டிய நாள், தொலைபேசி மூலம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுவாரஸ்யமான நாள்.

**கன்னி** சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், தொழிலை விருத்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், வாகன சுகமுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், சிவனின் மைந்தனை வழிபட்டு ஆனந்தம் காண்பீர்கள், தாய்வழி ஆதரவு பெருகும்.

**விருச்சிகம்** பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள், உறவினர்களின் வழியில் உதவிகள் கிடைக்கலாம், தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**தனுசு** அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், இல்லத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** ஆழ்ந்த சிந்தனை உண்டு, பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், வழிபாட்டால் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் உதவியுண்டு, சயன சுகமான நாள்.

**கும்பம்** புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள், இடமாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**மீனம்** அதிர்ஷ்டகரமான நாள், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், மதிப்பும், மரியாதையும் உயர்வடையும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன நன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்களின் விலை அதிகரிப்பு



2013ஆம் ஆண்டுகான வரவு செலவுத் திட்டத்தில் சுங்கத் தீர்வை அதிகரிக்கப்பட்டதால் சகல வகை யான வகையான வாகனங்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள் ளன என வாகன இறக்குமதியா ளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் சந்திர தெரிவித்தார்.

இதன் பிரகாரம் வாகனங்களின் விலை 2 இலட்சம் ரூபாயில் இருந்து 5 இலட்சம் ரூபாயுக்கு இடையில் அதிகரிக்கப்பட்டுள் ளது.

சிறியரக காரான மாருதியின் விலை 2 இலட்சம் ரூபாயினா லும் டொயோட்டா விட்ஸ்ன் விலை 2 இலட்சம் ரூபாயில் இருந்து இரண்டரை இலட்சம் ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

இதேவேளை, வான் மற்றும் லொறி ஆகியவற்றின் விலைகள் 4 இலட்சம் ரூபாயினாலும் 5 தொன் எடையுடைய வாகனங்களின் விலை கள் 4 இலட்சம் ரூபாய் முதல் 5 இல ட்சம் ரூபாயினாலும் அதிகரித்துள் ளன.




## கொழும்பு கிராண்ட் ஓரியன்டல் பகுதியில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு



கொழும்பிலுள்ள சுமார் 170 வருட காலம் பழமையான ஆங்கிலேயர்களின் மூலம் நிர்மாணிக் கப்பட்ட கிராண்ட் ஓரியன்டல் ஹோட்டல் மற்றும் அதனைச் சூழந்து காணப்படும் பொலிஸ் திணைக் களத்துக்கு சொந்தமான பகுதிகளையும் சுமார் 1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்து அறிவிப்பை இலங்கை அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

PPP திட்டத்திற்கு அமைவாக இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படவுள்ளதுடன், ஹோட்டலின் பாரம்பரிய தோற்றத்தில் மாற்ற த்தை ஏற்படுத்தாத வகையில் அமையவுள்ளது.

இந்த அபிவிருத்தி திட்டத்துக்கான திட்ட வரைபை ஹோட்டலின் உரிமை யாண்மை வங்கியான ;இலங்கை வங்கி ஏற்கெனவே திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று கட்டமாக இந்த அபிவிருத்தி திடடம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கிராண்ட் ஒரியன்டல் ஹோட்டலானது கொழும்பு கோட்டைப் பகுதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்து.

# இந்தியாவின் வியாபாரக் குழு இலங்கை வருகை

கொட்ரிஜ் நிறுவனத்தின் தலை வர் அதி கொட்ரிஜ் தலைமையிலான உயர் மட்ட வியாபாரக் குழு ஒன்று இல ங்கைக்கு தனது உத்தியோகபூர்வ விஜ யத்தை நேற்று மேற்கொண்டுள் ளது.

இந்தக் குழுவில் உற்பத்தி நிர்மா ணம், ரியல் எஸ்ரேட், தகவல் தொழில் நுட்பம், வலு மற்றும் மின் மற்றும் வேக மாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் போன்ற துறைகளை சேர் ந்த நிபுணர்கள் இணைந்து கொண் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'டொயோட்டா' 28 இலட்சம் கார்களை திரும்ப பெறுகிறது

ஜப்பானைச் சேர்ந்த டொயோ ட்டா மோட்டார் கார்ப்பரேஷன் நிறு வனம், உலகளவில் விற்பனை செய்த 27 லட்சத்து 70 ஆயிரம் கார்களில் உள்ள கோளாறை சரி செய்வதற்காக, அவற்றை திரும்ப பெற உள்ளதாக தெரிவித்துள்ளது.


இந்த நிறுவனம் விற்பனை செய்த பிரியஸ் காரின் ஒரு சில மாதிரிகள் உட்பட 27.70 லட்சம் கார்களில், ஸ்ரியரிங் செயல்பாடுகளில் குறை பாடுகள் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. மேலும் தண்ணீர் குழா ய்களிலும் பிரச்சினை இருப்பது தெரியவந்துள்ளது.

இதையடுத்து இந்த கார்களை திரும்பப் பெற்று, கோளாறு சரி செய்து தரப்படும் என இந்நிறுவனம் தெரி வித்துள்ளது.

கடந்த 2 மாதங்களில் இந் நிறு வனம் ;லட்சக்கணக்கான கார்களை திரும்பப் பெறுவதாக இரண்டாவது முறையாக இது போன்ற அறி விப்பை வெளியிட்டுள்ளது.

சென்ற ஒக்ரோபர் மாதம் கார்க் கதவின் கண்ணாடியை இயக்குவ தில் உள்ள கோளாறு காரணமாக 74 லட்சம் கார்களை திரும்பப் பெற்று கோளாறை சரி செய்வதாக அறிவித் திருந்தது.

# 10 சிறந்த வர்த்தக தலைவர்கள்; எல்எம்டி சஞ்சிகை தரப்படுத்தல்




எல்எம்டி சஞ்சிகையின் மூலம் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் சிறந்த 10 வர்த்தக தலை வர்களை தெரிவு செய்யும் தரப்படுத்தலை அண் மையில் வெளியிட்டுள்ளது.

இதன் தரப்படுத்தலுக்கு அமைய பின்வரும் வகையில் சிறந்த 10 தலைவர்கள் தெரிவு செய் யப்பட்டிருந்தனர்.

1.மஹேஷ் அமலீன், 2.ராஜன் பிரிட்டோ, 3.அமல் கப்ரால், 4.சஞ்சீவ் கார்டினர், 5. கலாநிதி விஜித் கன்னங்கர, 6.அஷ்ரவ் ஓமர், 7.மொஹான் பண்டிதகே, 8.அசோக பீரிஸ், 9.சுசந்த ரத்நாயக்க, 10.ஹரி செல்வநாதன்.

# இலங்கை-ஜப்பான் உறவு; நாணயக் குத்தி வெளியீடு




இலங்கை அரசாங்கம் மற்றும் ஜப்பான் அரசாங் கங்களுக் கிடையி லான இராஜதந்திர உறவின் 60 ஆண் டுகள் நிறைவினைக் குறிக்கும் விதத் திலான ரூ.1000 முகப் பெறுமதியுடைய வெள்ளி நாணயக் குத்தியினை இலங்கை மத்திய வங்கி வெளியிடவுள்ளது.

இது இலங்கை மத்திய வங்கியினால் இதுவரை வெளியிடப்பட்ட ஞாப கார்த்த நாணயக் குத்திகளில் 57ஆவது தொடர் குத்தியாக விளங்கு வதுடன் இது ஜப்பானிய அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் ஜப்பான் மின்டினால் வார்க்கப்பட்டிருக்கிறது.

## வளர்ந்துவரும் சுற்றுலா மேற்கொள்ளக்கூடிய 5 நாடுகளில் ஒன்றாக இலங்கை தெரிவு

உலகளாவிய ரீதியில் வளர்ந்து வரும் சுற்றுலா மேற்கொள்ளக்கூடிய சிறந்த 5 நாடுகளில் ஒன்றாக இலங் கையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த தரப்படுத்தல் உலக சுற் றுலா சந்தையின் துறைசார் அறிக் கையில் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாவை மேற் கொள்ளக்கூடிய வகையில் வளர் ந்து வரும் இதர நாடுகளில் மெக் சிகோ, மலேசியா, இந்தோனேசியா மற்றும் ஆஜர்டினா போன்ற நாடு களும் உள்ளடங்குகின்றன.

இலங்கை இந்த தரப்படுத் தலில் உள்வாங்கப்படுவதற்கான காரணங்களாக யுத்தம் நிறைவ டைந்த பின்னர் மேற்கொள்ளப் பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக் கைகள், சொத்துகளில் முதலீடு களை மேற்கொள்ளல் மற்றும் நாட்டின் வனப்பு போன்றன அமைந் துள்ளன.

# அடுத்த 5 ஆண்டுகளில் உ/தி துறையில் இந்தியா இரண்டாம் இடம் பிடிக்கும்

## அமெரிக்க ஆய்வறிக்கையில் தகவல்

அடுத்த 5 ஆண்டுகளில் உற் பத்தித் துறையில் சீனாவுக்கு அடு த்து 2-வது இடத்தை இந்தியா பிடிக் கும் என்று ஓர் ஆய்வறிக்கை தெரி விக்கின்றது.

அமெரிக்க போட்டித்திறன் கவுன் சிலும் டிலாய்டி டவுசி டோமட்சூ நிறு வனமும் இணைந்து 2013-ம் ஆண் டில் சர்வதேச உற்பத்தித் துறை நிலை வரம் குறித்து ஆய்வு மேற் கொண்டன.

38 நாடுகளில் உள்ள பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த 550 தலைமை செயல் அதிகாரிகள், மூத்த உற்பத்தித் துறைத் தலைவர்கள் ஆகியோரிடம் தற்போது உள்ள உற் பத்தித் துறை போட்டித் திறன் மற் றும் அடுத்த 5 ஆண்டுகளில் நிலை வரம் தொடர்பாக புள்ளி விபரங்களைத் திரட்டி ஆய்வு மேற்கொண்டது.

இதன் ஆய்வு அறிக்கையில் கூறியுள்ளதாவது,

அடுத்த 5 ஆண்டுகளில் உற்பத் தித் துறையில் சீனா முதலிடத்திலும் இந்தியா, பிரேசில் ஆகியவை முறை யே இரண்டு, மூன்றாம் இடங்க ளையும் வகிக்கும். இந்தியாவின் பல்வேறு தன்மைகளை உள்ளடக் கிய உற்பத்தித் திறமை, ஜனநாயக ஆட்சி முறைமை கட்டமைப்பு வசதி மேம்பாடு ஆகியவற்றால் உற்பத் தித் துறை வளர்ச்சியடையும்.

தற்போது வளர்ச்சி அடைந்த நாடுகள் வரிசையில் முதல் 10 இடங்களில் ஜேர்மனி (2-ம் இடம்), அமெரிக்கா (3-ம் இடம்), தென் கொரியா (5-ம் இடம்), கனடா (7-ம் இடம்), ஜப்பான் (10-ம் இடம்) உள்ளன.

வளரும் நாடுகள் வரிசையில் சீனா (முதலிடம்), இந்தியா (4-ம் இடம்), தைவான் (6-ம் இடம்), பிரே சில் (8-ம் இடம்), சிங்கப்பூர் (9ம் இடம்) உள்ளன.

அடுத்த 5 ஆண்டுகளில் உற் பத்தித் துறை வளர்ச்சியில் ஜேர் மனி 4-ம் இடத்துக்கும், அமெரிக்கா 5-ம் இடத்துக்கும், தென் கொரியா 6-ம் இடத்துக்கும், கனடா 8-ம் இடத் துக்கும், ஜப்பான் 12-ம் இடத்துக் கும் வந்துவிடும்.

பிரேசில் நாட்டில் உற்பத்தித் துறை அதிக வளர்ச்சியடையக் கூடிய வாய்ப்புள்ளதால், 3-ம் இடத் துக்கு வரும். வியட்நாம் 10-ம் இடத்தைப்பிடிக்கும்.

செயல்திறன் சார்ந்த புதிய கண் டுபிடிப்புக்கள், பொருளாதாரம், வர்த்தகம், நிதிநிலை, வரி விதிப்பு முறை ஆகியவை ஒருநாட்டின் உற் பத்தித் துறை போட்டித்திறனை நிர் ணயிப்பவையாக இருக்கும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மிலங்காவை கைவிட பங்குச்சந்தை தீர்மானம்

மிலங்கா விலைச்சுட்டெண்ணை கைவிடப் போவதாக கொழும்பு பங்குச் சந்தை அறிவித்துள்ளது.

2013 ஜனவரி முதலாம் திகதி யிலிருந்து மிலங்கா சுட்டெண்ணை கைவிடத் தீர்மானித்துள்ளதாகவும்; ஏற்கெனவே இவ்வருட ஆரம்பத்தில் எஸ் அன்ட் பி சிறிலங்கா சுட்டி அறி முகப்படுத்தப்பட்டுள்ளது எனவும் பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு பங்குச் சந்தையைப் பொறுத்தவரையில் இது முக்கிய மானதொரு முன்னேற்றமாகும்.

ஏனெனில் முன்னர் எம்மிடம் சர் வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற ஒரு சுட்டெண் இருக்கவில்லை.

நாம் மிலங்கா விலைச் சுட்டெண் ணையும் தொடர்ந்து பேணி வந் தால் அது ஒரே வேலையை இருவர் செய்வது போலாகிவிடும் என கொழு ம்பு பங்குச் சந்தை தலைவர் கிரி ஷாந் பாலேந்திரா கூறினார்.

மிலங்கா விலைச் சுட்டி 1999 ஜனவரியில் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த 13 ஆண்டுகளாக நடைமுறை யில் இருந்தது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5589.43 | 5556.32 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5152.98 | 5144.32 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3034.6 | 3028.68 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 1,439.192

உயர்வடைந்த பங்குகள்(ரூ) பிறவுண் இன்வெஸ்ட்மன்ட்ஸ்(4.20), மிரமர்(99.80), றிச்சர்ட் பீரிஸ் எக்ஸ்(36.10), சிலோன் பேவரேஜ்(455.20), ரன்ஜிரின்(78.00).

சரிவடைந்தபங்குகள்(ரூ) சாம்சன் இன்ரநஷ.(76.00), இன்பிரா சக்ஸர் (115.40), சிலோன் பிறிண்டர்ஸ்(1806.20), சிலிசிங்(104.00), ஜெரண்டிப் லான்ட் (600.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 128.52 | 131.40 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 203.31 | 208.86 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 163.31 | 168.48 |
| சுவிஸ் பிராங் | 135.31 | 140.23 |
| கனேடிய டொலர் | 127.63 | 132.01 |
| அவுஸ்திரேலிய டொலர் | 131.88 | 136.71 |
| சிங்கப்பூர் டொலர் | 104.19 | 107.62 |
| ஜப்பான் யென் | 1.57 | 1.63 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.38 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.40 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## எரிவாயுவின் விலையை அதிகரிக்க கோரிக்கை

எரிவாயுவின் விலையை அதிகரிக்கு மாறு லாஃப் எரிவாயு நிறுவனம் நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய அண்மைக்காலமாக காண ப்பட்ட எரிபொருள் விலைகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார். இதனையடுத்து இந்தக் கோரிக்கை தொடர்பில் ஆராய்வதற்கு குழு வொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது. இந்த எரிவாயு நிறு வனத்திற்கு விலை உயர்வை மேற்கொள் வதற்கான அனுமதியினை வழங்குவதா.? என்பது தொடர்பில் இதுவரை தீர்மானமொ ன்று எடுக்கப்படவில்லை என சபையின் தலைவர் மேலும் கூறினார். (ந-2)

# பந்தயக் கார் பணத்தை கல்விக்கு முதலிடுங்கள்- ரணில்

(கொழும்பு)

அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் தகவல் படி கடந்த வருடம் நாட்டிற்கு 10 பந்தய கார்களை இறக்குமதி செய்தால் ஆயிரத்து 600 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்க ளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் களுக்கும் இடையில் நேற்றைய தினம் காலை கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றின் போது அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

கல்வித்துறைக்கு பணம் இல்லை என்கி றார்கள். அப்படியாயின் இந்தப் பணத்தை கல்விக்காக செலவிடலாம் என அவர் சுட்டிக் காட்டினார்.

கல்வித்துறைக்காக ஒதுக்கப்பட்ட சிறு தொகை நிதியும் பலரினால் மோசடி செய் யப்படுவதாக எதிர்க்கட்சி தலைவர் தெரி வித்தார். (ந-2)

YARL Taxi

யாழ் குடாநாட்டின் எப்பகுதி யில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-60/= அடுத்து ஒவ் வொரு Km-40/=)

இங்கு முச்சக்கரம் மற்றும் கார் களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத் திக் கொடுக்கப்படும்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.
E-Mail - Yarltaxi@gmail.com

# வெலிக்கடையில் உயிரிழந்த கைதிகளின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்குங்கள்

## கைதிகள் விடுதலை அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

வெலிக்கடை சிறையில் உயிரிழந்த கைதி களின் குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட வேண்டுமென அரசியல்கைதிகளை விடு தலை செய்யும் அமைப்பின் உறுப்பினரும், சட்டத்தரணியுமான ஸ்ரீனாத் பெரேரா கோரி யுள்ளார்.

அண்மையில் மேற்படி சிறைச்சாலை யில் இடம்பெற்ற வன்முறையில் 27 கைதி கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட அனை த்து கைதிகளின் உறவினர்களுக்கும் நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும்.

போர் இடம்பெற்ற காலத்தில் மரண விசார ணையின்றி சடலங்களை அடக்கம் செய்யும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் விடுக் கப்பட்டிருந்தது.

தற்போது அவ்வாறான ஓர் அவசியம் கிடையாது. எனினும், அரசாங்கத்தினால் மேற் கொள்ளப்படும் பிரேத பரிசோதனைகள் குறி த்து திருப்தி அடைய முடியாது.

பிரேத பரிசோதனைகளுக்கு சர்வதேச கண்காணிப்பாளர்களின் பிரசன்னம் அவசி யமானது என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (ந-2)

# 19 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எதுவும் தெரியாது

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

19 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பாக எது வும் தெரியாது என தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் 19 ஆம் திருத்தச் சட்டமொ ன்றை அமுல்படுத்த உள்ளதாக வெளியா கும் தகவல்கள் பற்றி தமக்கு எதுவும் தெரி யாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

19 ஆம் திருத்தச் சட்ட அறிமுகம் தொட ர்பில் அரசாங்கம் இதுவரையில் எவ்வித உத்தியோகபூர்வமான தகவல்களையும் அறி விக்கவில்லை என அவர் தெரிவித்துள் ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென அவர் வலியுறுத் தியுள்ளார். அர்த்தமுள்ள வகையில் அதிகா ரப் பகிர்வு யோசனைத் திட்டம் முன்வைக்க ப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை 13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்து அதற்கு பதிலாக 19 ஆம் திருத்தச் சட்டத்தை அறிமுகம் செய்ய அரசா ங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகக் குறிப் பிட்டுள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் இந்த 19 ஆம் திருத்தச் சட்டம் பற்றிய வரைவுத் திட்ட யோசனை சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ந-2)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அத்திவாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவனரும் சைவப் பெருவள்ளலாருமான

சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் குருபூசைத்தின விழா



திங்கட்கிழமை-19.11.2012

அன்புடையீர்!

நிகழும் நந்தன வருடம் கார்த்திகைத் திங்கள் 04 ஆம் நாள் (19.11.2012) திருவோண நட்சத்திரம் கூடிய திங்கட்கிழமை அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அத்திவாரமிட்டவரான சேர். பொன். இராமநாதன் அவர்களின் குருபூசைத் தினமாகும்

இதனையொட்டி அன்று காலை 7.00 மணி தொடக்கம் 8.30 மணிவரை பல்கலைக்கழகத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு பார்வதி சமேத ஸ்ரீ பரமேஸ்வரப் பெருமானுக்கு அஷ் டோத்தரசத (108) சங்காபிஷேகமும் விசேட பூசையும் நிகழவுள்ளன. அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். அன்று காலை 8.30 மணிக்குப் பல்கலைக்கழக வளவிலுள்ள சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் சிலைக்கும் பல்கலைக்கழக சபா மண்பத்திலுள்ள (Board Room) அவரின் உருவப் படத்திற்கும் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம் அவர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பரமேஸ்வராக் கல்லூரி, இயக்குநர் சபை,
ஸ்ரீபரமேஸ்வரன் ஆலய பரிபாலனசபை, இந்து மன்றம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(991)

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சதயம் 2<br>உயரம்:- 5'5"<br>கி.பா:-1.75<br>தொழில்/ தகைமை:- Bsc Teacher<br>B/689 | பிறப்பு:-1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-ஆயிலியம்<br>உயரம்:-5'5"<br>கி.பா:- 58.25, 4 இல் செவ்.<br>தொழில்:- பட்டதாரி (விவசாய தொடர்பாடல் முகாமைத்துவம்) G/685 |
| பிறப்பு:- 1983<br>நட்சத்திரம்:- மூலம்<br>உயரம்:-5'8"<br>கி.பா:-8.5<br>தகைமை/ தொழில்:-Bsc (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்) B/690 | பிறப்பு:- 1990 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அச்சுவினி<br>உயரம்: 5'5'<br>தகைமை: A/L (கலை)<br>G/686 |
| பிறப்பு:- 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-விசாகம் 2<br>உயரம்:-5'6"<br>கி.பா:-30, 1 இல் செவ்.<br>தகைமை/தொழில்:- O/L, (வியாபாரம் சுயதொழில் வயறிங் பைப் லைனிங் சொந்தமாக செய்தல்)<br>B/308 | பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா:- 22.5<br>தொழில்:- சட்டத்தரணி (U.K)<br>G/688 |
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தரம்<br>உயரம்:-5'5"<br>கி.பா:-31.75, 8 இல் செவ்.<br>தகைமை:- A/L B/309 | பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அச்சுவினி<br>உயரம்:- 5'<br>கி.பா:-32<br>தகைமை:- A/L<br>G/520 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

செவ்வாய்க்கிழமை விடுமுறை

ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தொகையான பணத்துடன் வர்த்தகர் தலைமறைவு!

## வடமராட்சியில் இரண்டாவது சம்பவம்

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடி நகரப்பகுதியில் இரண்டாவது வர்த்தகரும் பெருந்தொகையான பணத்துடன் தலைமைறைவாகியுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் சிலரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளர் அங்கு உள்ள சில வர்த்தகர்களிடம் பல இலட்சம் ரூபா பணத்தை கைமாறாக பெற்றுள்ளார்.

ஏனையவர்களிடம் பணப்பரிமாற்ற தலைவராகவும் (சீட்டு) இருந்து பல இலட்சம் ரூபா பணத்தையும் தன்வசப்படுத்தியுள்ளார்.

அத்துடன் சில வங்கிகளில் மீள்செலுத்தும் கடனாக அதிகளவான பணத்தையும் பெற்று சுமார் 3 கோடி ரூபா பெறுமதியான பணத்துடன் கடந்த 9 ஆம் திகதி முதல் தலைமறைவாகியுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகிறது.

கரணவாய் மேற்கை சேர்ந்த வர்த்தக நிலைய உரிமையாளரே இவ்வாறு தலைமறைவாகியவராவார்.

குறித்த வர்த்தக நிலைய உரிமையாளரிடம் பணத்தை கொடுத்து ஏமாற்றப்பட்டவர்கள் குறித்த நபரின் வீட்டுக்கு சென்று மனைவியிடம் விசாரித்த போது அவர் கடந்த 9 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பணத்தை கொடுத்து ஏமார்ந்தவர்கள் சிலர் வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் என்ற நம்பிக்கையிலேயே பணத்தை கொடுத்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் அவ் வர்த்தக நிலையம் தற்போது வேறொருவரின் பேருக்கு கைமாற்றப்பட்டுள்ளதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

* இதேபோன்று கடந்த மாதமும் கரவெட்டி பகுதியை சேர்ந்த வர்த்தகர் ஒருவர் 3 கோடி ரூபாவுடன்அவுஸ்திரேலியாவுக்கு தப்பி சென்றமை குறிப்பிடத்தக்கது. (ந-3-24)

# தரம் 5 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் கடந்த 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான பெறுபேற்று சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சகல பாடசாலைகளிலும் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.


பரீட்சையில் இரு வினாப்பத்திரங்களிலும் தலா 35 புள்ளிகளைப் பெற்று மொத்தமாக 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கே இச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்ததினத்தை முன்னிட்டு இலங்கை பரீட்சைத்திணைக்களம் மேற்படி சான்றிதழ்களை சகல வலயக்கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது. இச் சான்றிதழ்களை சகல பாடசாலைகளிலும் இன்று திங்கட்கிழமை குறித்த மாணவர்களுக்கு வழங்க வேண்டுமென பாடசாலை அதிபர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-3-29)

# நீர்வள பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் நீர்வளம், பிரச்சினைகள், பாதுகாப்பு தொடர்பான பயிற்சிப்பட்டறை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் பா. தபேந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இப்பயிற்சிப் பட்டறை இன்று திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4.30 மணி வரை யாழ்ப்பாண் கல்வி வலய ஆசிரியர்களுக்கு யாழ்.வலய முகாமைத்துவ மண்டபத்திலும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி தீவக கல்வி வலய ஆசிரியர்களுக்கு யா/வைத்தீஸ்வரா கல்லூரியிலும் நடைபெறும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது. (ந-9)




நன்றி:- ஐலண்ட்

# வலி.வடக்கு மக்களுக்கு வாழ்வாதார உதவி கிட்டியது

## ஜப்பானிய தூதுவர் நேரில் வழங்கினார்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதுவர் நோபஹிதோ ஹோபோ நேற்று முன்தினம் வலிகாமம் வடக்கு பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டதோடு அப்பகுதி மக்களுக்கான குடிநீர் வசதிகள் மற்றும் வாழ்வாதார உதவிகளையும் வழங்கியிருந்தார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 60 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு யாழ்.குடாநாட்டில் நடத்தப்பட்ட நிகழ்வுகளில்கலந்து கொண்ட ஜப்பானிய தூதுவர் வலிகாமம் வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச செயலர் பிரிவு பிரதேசத்தில் மீள்குடி யேற்றப்பட்ட மக்களுக்கு சமூக செயற்பாட்டு மையத்தின் ஊடாக செய்து கொடுக்கப்பட்டுள்ள குடிநீர் வசதிகளுக்கான ஏற்பாடுகளையும் சம் பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

மேலும் மீள்குடியேற்ற மக்களுக்கான வாழ்வாதார உதவிகளையும் தூதுவர் வழங்கியிருந்தார்.

சுமார் 5 மில்லியன் ரூபாவிற்கு மேல் இந்த உதவித் திட்டங்களுக்கு செலவிடப்பட்டுள்ளது.

இதேவேளை தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வலித்தூண்டல் புனித அன்னம்மாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் உபகரணங்களான கட்டுமரம், வெளியிணைப்பு இயந்திரம், வலை போன்ற உபகரணங்களையும் கையளித்ததோடு ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கிணற்றினை ஜப்பானிய தூதுவர் பார்வையிட்டதோடு கடற்றொழிலாளர்களுடன் சந்தித்து கலந்துரையாடினார்.

இதேவேளை வலித்தூண்டல் புனித அன்னம்மாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க தலைவரினால் ஜப்பானிய தூதுவருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ந-6)




# வலி.தெற்கு பிரதேச சபையில் பெரும் ஆளணி பற்றாக்குறை

## உடன் நிவர்த்தி செய்யுமாறு தவிசாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் உள்ள பெரும் ஆளணிப்பற்றாக்குறையினை நீக்கி மக்களுக்கு உரிய சேவையினை வழங்க அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலிகாமம் தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஆளணி வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாதுள்ளமையால் பாரியளவில் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது.

ஆளணி மீளாய்வு இடம்பெறுவதால் நியமனங்கள் எவையும் மேற்கொள்ளப்படலாகாது என்ற சுற்றிக்கை அனுப்பப்பட்டு ஒன்றரை வருடகாலத்துக்கு மேலாகின்றது.

தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் ஐந்து, ஆறு வருடங்களுக்கு மேலாக உளரீதியான பாதிப்புக்களுடனும் வேறு வழியின்றியும் கடமையாற்றுகின்றனர்.

அட்டவணைப்படுத்தப்படாத பதவியணியைச் சார்ந்த ஊழியர்கள் இதனால் மன உளைச்சலுக்கு உள்ளாகி தங்கள் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாது என்றெண்ணி பல ஊழியர்கள் கடமையிலிருந்து விலகி சுயதொழில் முயற்சியிலும் தனியார் நிறுவனங்களிலும் பணி புரிகின்றனர்.

பிரதேச சபைகள் தாபிக்கப்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட ஆளணியினரே இன்றுவரை அதிகரித்த தேவைகளின் மத்தியில் கடமையாற்றி வருகின்றனர்.

இதனால் பொதுமக்களின் அன்றாட சுகாதாரப் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்க முடியாமலும் பல்வேறுபட்ட விமர்சனங்களுக்கும் விசனங்களுக்கும் பிரதேச சபைகள் உள்ளாகின்றன.

குறித்த பதவியொன்றில் அமைய அடிப்படையிலும் வெளிவாரி அடிப்படையிலும், நியமிக்கப்பட்ட ஊழியர்கள், மேலதிகாரிகள் பணிக்கும் அனைத்துக் கடமைகளையும் ஆற்ற வேண்டிய நிலையிலுள்ளனர்.

குறிப்பாக எமது பிரதேச சபையில் தற்காலிகமாக வெளிவாரியாகவும் நியமிக்கப்பட்ட சுகாதாரத் தொழிலாளிகள், வேலைத் தொழிலாளிகள் போன்றோர் சாரதியாகவும் காவலாளியாகவும் அலுவலகப் பணியாளர்களாகவும் நூலகத் தொழிலாளியாகவும் பதிற் கடமையாற்றுகின்றனர்.

இதனால் அவரவர்களுக்குரிய பணிகள் தாமதமடைகின்றன. அல்லது தேக்கமடைகின்றன.

இதனால் பொதுமக்கள் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கு ஆளாவதுடன் பிரதேச சபையும் விமர்சனங்களுக்கு உள்ளாகின்றது.

ஆளணி நியமனம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதங்கள் பல அனுப்பப்பட்டும் இன்றுவரை சாதகமான பதில் எவையும் கிடைக்கப்பெறவில்லை.

டெங்கு நோய் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்காவும் எமது பிரதேச சபையின் தூய்மையை பேணுவதற்காகவும் வெளிவாரி அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஆளணியினரும் பலமுறை கோரியும் அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அவர்களைக் கூட வேலையிலிருந்து நிறுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் பிரதேச சபை காணப்படுகிறது.

வெற்றிடங்கள் நிரப்பப்படுமாயின் இவர்களுக்கு சபை நிதியில் வழங்கப்படும் சம்பளம் மீதமாவதுடன் இந்நிதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும்.

எனவே உள்ளூராட்சி மன்றங்களின் வினைத்திறனான சேவையை அதிகரிப்பதற்கும் நீண்டகாலமாக நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் ஊழியர்களுக்கு நியமனம் வழங்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

மேலும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சி அதிகாரத்தை எமக்கு கையளித்த மக்களின் நியாயமான எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கும் தேவையற்ற விமர்சனங்களை தவிர்த்து சிறந்த உள்ளூராட்சி மன்றமாக விளங்குவதற்கும் ஊழியர்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்கும் நிரந்தர நியமனம் வழங்குதல் தொடர்பில் உரிய அதிகாரிகள் விரைவானதும் காத்திரமானதுமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அனைத்து தரப்பினரையும் வேண்டிக் கொள்கின்றேன் என அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் சீர்திருத்தச் செம்மல்

# சேர்.பொன்.இராமநாதன்



**சைவப்பெரும் வள்ளல் சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் எண்பத்திரண்டாவது குருபூசைத் தினமாகிய இன்று நாவலர் பெருமானால் தமிழர் சேர்.பொன்.இராமநாதன் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதை மிகவும் சுவாரஸ்யமாகப் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை தமது நூலாகிய இலக்கிய "நாவலர் எழுந்தார்" என்ற தலைப்பில் எழுதியிருந்தார் என்பதை வாசகர்கள் மனங்கொள்வதற்காக மீள்பிரசுரமாக்கப்படுகிறது. இந்துக்களின் சீர்திருத்தச் செம்மல் எனப்புகழ்ந்த சைவப்பெருவள்ளலார் அவரது பணிகளைப் பன்மடங்காக்கி விசாலமாக்கி நனவாக்கிய பெருந்தகையே சேர்.பொன்.இராமநாதன் என்பதை இத்தினத்தில் நன்றிக் கடனுடன் அவரை நினைவுகூருவது நமது கடமையாகும்.**

ஆறுமுகநாவலர் 1879 ஆம் அண்டு இறைபதம் அடைந்தார்.

அதற்கு முதல் ஆண்டு ஒரு மாபெருங் கூட்டம் நாவலர் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே நடந்தது.

இப்பொழுது நாவலர் வித்தியாசாலை வண்ணார்பண்ணைச் சந்திக்கு வடகிழக்குக் கோணத்தில் இருக்கிறது. அந்தக் காலத்தில் அது மேற்படி சந்திக்குத் தென்மேற்குக் கோணத்தில் இருந்தது. அதிலேதான்அந்தக் கூட்டம் நடந்தது.

கல்விமான்கள், பிரபுக்கள், பிராமண சைவ குருமார்கள், உபாத்தியாயர்கள், இன்னும் பல்வேறு பிரபலஸ்தர்கள் திரள் திரளாய் வந்து பிரதிவாதங்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

கொழும்பிலிருந்தும் மிகப் பிரசித்திபெற்ற சட்ட நிபுணர்கள் சமூகஞ் செய்திருக்கிறார்கள். முன்பின் காணாத, கேளாத கூட்டம் அது.

அன்றி அக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்கவேண்டியவர் ஆறுமுகநாவலர். ஆனால் அன்று அவர் தலைமை வகிக்கவில்லை. அந்த வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு பக்கத்தில் திண்டுத் தலையணை ஒன்றில் அடிக்கடி சாய்ந்துகொண்டும் மடியிலும் பக்கங்களிலும் அடுக்கிய தலையணைகளில் முழங்கைகளை ஊன்றி உள்ளங் கைகளினாற் கபோலங்களைத் தாங்கிக்கொண்டுங் கூட்ட நடைமுறைகளை அவதானித்தபடி இருக்கிறார்கள். அவர்களுக்குத் தொய்வு வருத்தம். குளிர்காலத்திலே இடையிடையே வருகின்ற ஒருவகைக் கசம் அது.

மூச்சுவிடமுடியாது பேசவியலாது வயிற்கைக்கொய்து வாங்குகிற பொல்லாத வருத்தம் காச வருத்தம்.

சென்னைச் சர்வகசாலையார் முதன்முதல் நடத்திய பி.ஏ.பரீட்சையில் யாழ்ப்பாணத்தவர்கள் இருவர் இப்பரீட்சை எடுத்துச் சித்தி எய்தியவர்கள். ஒருவர் வை.விசுவநாதபிள்ளை மற்றவர் சி.வை.தாமோதரம்பிள்ளை. விசுவநாதபிள்ளை மகாவிவேகி கணிதமேதை தாமோதரம்பிள்ளைக்கு ஆசிரியர் வாதஞ்செய்வதில் பெரியசாமர்த்தியவான். நாவலர் அவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் மூத்தவர். நாவலர் அவர்களும் பிள்ளையும் இளமைதொடக்கம் பத்திரிகை வாயிலாகப் பல விஷயங்களில் வாதஞ்செய்து வந்தவர்கள். நாவலர் அவர்களை எதிர்த்து நின்று பல கண்டனப் பத்திரிகைகள் பதித்துவெளியிட்டவர். இந்த விசுவநாதபிள்ளை இவர் ஒருமுறை சிதம்பரத்திலே நாவலர் அவர்களோடு நேரில் வாதஞ்செய்து நாவலரின் கொள்கைகளுக்கிணங்கி அவர்களிடம மதிப்பு வைத்து அன்றுதொடக்கம் நாவலர் அவர்களைக் குருவாகக் கொண்டவர்.

இந்நிலையில் வை.விசுவநாதபிள்ளையின் தலைமையில் அன்று அக் கூட்டம் நடந்தது.

சேர்.பொன்.இராமநாதன் துரைக்கு அப்போது இருபந்தைந்து வயது. சிரித்த முகம். தங்க சொரூபம். அப்போதுதான் சென்னைபட்டணத்திலிருந்து படித்துவிட்டு வந்தவர். யாழ்ப்பாணத்தவராயினும் யாழ்ப்பாணத்தவர்களுக்கு அவரைப்பற்றி ஒன்றுந்தெரியாது. யாழ்ப்பாணம் வந்திருக்கிறார்.

பிறிற்றே என்பவர் பிரசித்திபெற்ற பழுத்த வழக்கறிஞர் அக்காலத்துச் சட்ட நிபுணர்களுள்ளே தலைசிறந்தவர் அவர். இலங்கையிலேயுள்ள எல்லோரும் அவரை அறிவர்.கொழும்பிலும் யாழ்ப் பாணத்திலும் அவருக்குப் பெரிய பெயர். பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம். அவருக்கு யாழ்ப்பாணத்தில் அளவுகடந்த செல்வாக்கு அந்த நாட்களில் இருந்தது.

இந்த இருவரும் இலங்கைச் சட்டசபையில் இலங்கைப் பிரதிநிதித்துவத்திற்குப் போட்டியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சர்வசன வாக்குரிமையைப் பற்றி அந்தக் காலத்திற் பேசுவதுங் கிடையாது. உரிமைஉள்ளவர்களுங் குறித்த ஓரிடத்திற்குப் போய்த் தமது வாக்கை இன்னாருக்கென்று வழங்குவதும் இல்லை.

கல்விமான்கள், பிரபுக்கள் கூட்டங்கூடித் தங்கள் அபிப்பிராயத்தை அரசாங்கத்தாருக்குத் தெரிவிப்பது வழக்கம். இந்த இருவரில் தக்கவர் இன்னாரென்று வாதிப்பதற்குத்தான்அந்தப் பாரிய கூட்டம் விசுவநாதபிள்ளையின் தலைமையில் நடக்கின்றது.அந்தக் கூட்டத்திற்கு ''வாதமகாசபை'' என்றும் பெயர் வைத்துக்கொள்ளலாம். நாவலர் கூட்ட நடைமுறைகளை அவதானித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல்வேண்டும். வாதப் பிரதிவாத மின்னல்கள், முழக்கங்கள் நடக்கின்றன.

கைவேல் – எறிகிறவேல்– இறகுள்ள அம்பு இல்லாத அம்பு– வாள்–தண்டு– சக்ரம்– [illegible] மேலே தெய்வப் படை[illegible] கைவைக்கிற சமயம் அந்தச் சமயம்.

பிறிற்றே கட்சிக்குப் பேசவந்தவர்கள் எல்லாம் யாழ்ப்பாணத்திலுங் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள். வாதமில்லா இடத்திலும் வாதம் வருவிக்கக்கூடியவர்கள். நாவலர் அவர்களின் கசம் அவர்களுக்கு எதிர்பாராத அனுகூலம் அளித்தது.

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**
*பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை (சேர்.பொன்.இராமநாதன்) நம்பிக்கை நிதியம்*

பிறிற்றேவை ஆகாயத்திலே தூக்கிக்கொண்டு போய்வைத்துவிட்டார்கள் அவர்கள். இராமநாதன் கட்சிசோர்ந்துபோய்விட்டது. விசுவநாத பிள்ளையும் நிலைதளர்ந்து போனார். அவருடைய பார்வை நாவலர் அவர்கள் முகத்தில் விழுந்தது. சனங்களும் அங்கேதான் பார்க்கிறார்கள்.

**தலையணைகள் அங்கும் இங்கும் சிதறின!**

"பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கண் லென்ன எழுந்தார்''

"மாகம டங்கலும் மால்விடை யும்பொன்
னாகமும் நாகமும் நாண நடந்தார்''

[illegible] அவர்கள் கருதாத கருத்துக்கள் அமைகிறதுண்டு கம்பருடைய சில அடிகளில் அன்றைக்கு அப்படிப்பட்ட பொருள் அமைந்து கிடந்தது.

''விலகு பிள்ளை'' என்று வழக்கமாகச் சொல்லுவதைச் சொல்ல முன்னமே விசுவநாதபிள்ளை மேடையில் விலகி இடங்கொடுத்தார். நாவலர் **அவர்களின் நிலை கம்பீரமான தோற்றம், வீறு கொண்ட பார்வை, எண்ணங்களின் வேகம் இவற்றை வருணிக்க அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கம்பர் இல்லை.** ''அது கிடக்க எடுத்துக்கொண்டு வா தந்தி தபாற் கட்டுகளை'' என்றார்கள். நாவலர் அவர்கள் எல்லோரும் பிரமித்துப் போனார்கள்.

பிரசண்டமாருதத்திற்குப் பிறகு என்று சொல்லுகிற பிறக அந்தச் சபையில் நிலவியது. பேச்சு மூச்சு ஒன்றும் இல்லை. மேலே கிளம்பின பிறிற்றோ கட்சியினர் மெல்ல மெல்லக் கீழே இறங்கித் தரைமட்டத்திற்கு வந்துவிட்டார்கள்.

தபால் தந்திக்கட்டுக்கள் நாவலர் அவர்கள் முன்னிலைக்கு வந்து சேர்ந்தன. "ஒருவர் ஒருவராகவோ, இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டம் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்'' என்றார் நாவலர்.

அந்தநாட்களில் நல்லூர்க் கந்தசுவாமிகோயிலாருக்கும் பிராமணர்களுக்கும் பாரிய வழக்கு நடந்தது. கோயிலாருக்கு ஏற்பட்டவர் பிறிற்றே பிராமணரை ஆதரிப்பவர் நாவலர் அவர்கள். அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருக்குஞ் செல்வாக்கைப் பிறிற்றே அறிவார். பிறிற்றே நாவலர் அவர்கள் தமக்குச் சார்பாயிருந்தால் தாம் பிராமணர்களுக்கு வெற்றி கிடைக்கத்தக்க வகையில் வழக்கை நடத்திவைப்பார் என்று தமது அந்தரங்க நண்பர்கள் மூலம் நாவலர் அவர்களுக்குத் தெரிவித்துந் தாமே நேரிற் சில கடிதங்களில் – தந்திகளில் – ஒருவாறு குறிப்பிட்டும் இருந்தார் போலும், இந்த நேர்மையற்ற செயல் நாவலர்கள் இருதயத்திற் பெரு நெருப்பைக் கொளுத்திவிட்டது. அந்தக் கடிதங்களும் தந்திகளும் இந்தத்தபால் தந்திக் கட்டுக்களுக்குள் இருக்கும் என்று சொல்லவேண்டுவதில்லை.

வாதத்துக்கென்று வந்திருந்தவர்களில் இருந்தவர்கள் இருந்தே விட்டார்கள். எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக்கொண்டு வெளியிலே போய்விட்டார்கள்.

போனவர்கள் பின் உள்ளே வரவில்லை. தப்பித்துக்கொள்ள வழிவகையின்றித் தம்மையறியாமலே வாய்குழறி அகப்பட்டு அங்கு நின்றார்கள். அங்கு நின்றவர்கள் தமது உடல் நடுநடுங்க நாத்தழுதழுத்து ''பிறிற்றே தக்கவர் அல்லர்'' என்று தாமே சொல்லிச் சமாதானப்படுத்திக்கொண்டார்கள். அன்று நடந்த கூட்ட நிகழ்ச்சியோடு பிறிற்றேவின் பிரதிநிதித்துவக் கதை நின்றுவிட்டது.

**ஆறுமுகநாவலர் அவர்களின் ஆசீர்வாதத்தால் பொன்.இராமநாதன்துரை அன்று தொடக்கம் அரை நூற்றாண்டுகளுக்குமேல் இலங்கைச் சட்டசபையில் ஓரிலங்கைச் சிவப்பாயிருந்து விளங்கினார்.**

அருணந்தி சிவாச்சாரியார் ஒரு பெரிய மகான். அவருக்கு ஒருவகை வயிற்றுவலி இருந்தது. அவர் அந்த வலியை மாற்றாமல் தமது பிரார்த்தம் என்று கருதி அதை அநுபவித்துக்கொண்டு வந்தார்.

மாணவர்களுக்கப் பாடஞ் சொல்லுகிறபோது மாத்திரம் அவர் தமது வலியைை அங்கவஸ்திரத் தில் ஆவாகனம் பண்ணிப் பக்கத்தில் வைத்துவிட்டுப் பாடஞ்சொல்லுவது வழக்கம். அந்த வஸ்திரம் அதுவரை துடிதுடித்துக்கொண்டிருக்கும். பாடஞ்சொன்ன பிறகு பழையபடி அந்தவலியை எடுத்து வயிற்றில் விட்டுவிடுவார் என்று ஒருகதை.

மேலே கூறிய சபை நடந்த அன்று நாவலர் அவர்களின் கசம்– எத்தனையோ வைத்தியர்களுக்கு எடுபடாமலிருந்தது. இந்தக் கசம் நாவலர் அவர்கள் ஆவேசங்கொண்டு எழுந்த அந்தச் சந்தர்ப்பத்தில் ''வருகிறேன்'', ''போகிறேன்'' என்று சொல்லாமல் பறந்துவிட்டது.

**ஒரே ஒரு குறிப்பு:**
**எனக்கிந்தக் கதையை ஆயிரம் முறை சொன்னவர்கள் கூட்டத்தை நேரிற் கண்ணாலே கண்டவர்களும் அக்கூட்டத்தோடு தொடர்புபட்டவர்களும். நாவலர் அவர்களின் தமையனார் புத்திரரும் அவர்கள் சரிதத்தை எழுதியுள்ளவர்களும் என் ஆசிரியருமாயுள்ளார்கள். டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள் கதைகளைச் சொல்லி முடிக்கிற மாதிரி முடிக்கிறதற்காக நானும் எனக்கிந்தக் கதை வந்த கதையை சொல்லியிருக்கிறேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு வனப்பகுதிகள் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்படும்

## சுற்றாடல் அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள சூழலுக்கு ஏற்ற வனப்பகுதிகளை வர்த்தமானியில் பிரகடனப்படுத்துவதற்கு சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த 30 வருடங்கள் இடம்பெற்ற யுத்தத்தின் பின்னர் அந்த மாகாணங்களிலுள்ள வனங்கள் தொடர்பான ஆய்வொன்றை வன பாதுகாப்பு திணைக்களம் மேற்கொண்டதாக அம்மச்சின் செயலாளர். பி.எம்.யூ.டி. பஸ்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் சூழலுக்கு ஏற்ற வனப்பகுதிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் கூறினார்.

மஹிந்த சிந்தனை திட்டத்திற்கு அமைவாகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிடுகிறார். (ந-2)

# சட்டவிரோத மீன்பிடியில் இலங்கை ஈடுபடுகிறது!

## ஐரோப்பிய ஆணைக்குழு குற்றச்சாட்டு

இலங்கை சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக ஐரோப்பிய ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கை உள்ளிட்ட எட்டு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளை தடுக்க தவறினால் தடைகள் விதிக்க நேரிடும் என ஐரோப்பிய ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை, கம்போடியா, பீஜிதீவுகள், கய்னா, பனாமா, டோகோ மற்றும் வனுவாட்டு மற்றும் பொலிசீ ஆகிய நாடுகளில் இவ்வாறு சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த நாடுகளுக்கு கறுப்பு பட்டியல் இடவில்லை எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் ஐரோப்பிய ஆணைக்குழுவின் கடல்வள விவகார ஆணையாளர் மாரியா டமான்கனி தெரிவித்துள்ளார்.

தற்போதைக்கு தடைகள் விதிக்கப்பட மாட்டாது எனவும் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளத் தவறினால் எதிர்காலத்தில் ஐரோப்பிய நாடுகள் குறித்த நாடுகளுக்கு மீன்பிடி உபகரணங்களை விற்பனை செய்யாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-2)

# பொலிஸ் அதிகாரி சுட்டுக்கொலை

சப்ரகமுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இந்திரசோம ரட்நாயக்க என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

எலபாத்தவில் உள்ள அவரது வீட்டில் வைத்தே துணிகரமான இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ந-2)

# புலிகளின் செயற்பாட்டால் பல நாடுகளுக்கு அச்சுறுத்தல்!

## இலங்கை பாதுகாப்பு அமைச்சு கருத்து

ஐரோப்பியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் பிரான்ஸ் நாட்டில் வசித்து வந்த விடுதலைப்புலிகளின் இணைப்பாளர் பரிதி என்பவர் கொல்லப்பட்டமைக்கு விடுதலைப்புலிகளின் மத்தியில் உள்ள முரண்பாடுகளே காரணம் என்றும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் உருத்திரகுமாரனின் அணியும் நெடியன் அணியும் இணைந்து மாவீரர் நிகழ்வை பாரிஸில் நடத்த எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தமையே பரிதியின் கொலைக்கான காரணம் என்று இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ந-2)

# சிறைச்சாலை வன்முறை குறித்து ஐ.நாவிடம் முறையிடவுள்ளோம்

## ஜனநாயக மக்கள் முன்னணி தெரிவிப்பு

சிறைச்சாலை வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பில் தகவல்களை திரட்டி வருவதாக குறிப்பிட்டுள்ளார். தகவல்கள் திரட்டப்பட்டதன் பின்னர் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் முறைப்பாடு செய்யப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

வன்முறைகள் வெடித்த போது இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை மீறி சிறைச்சாலைத் திணைக்களம் செயற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். வன்முறைகள் வெடித்த போது இலங்கை மனிதவுரிமை ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை மீறி சிறைச்சாலைத் திணைக்களம் செயற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைகள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் செயற்பாடுகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-2)

# இந்திய வாகனங்களின் இறக்குமதி குறைப்பு

## ஜப்பானுக்கும் சீனாவுக்கும் வாய்ப்பு

இந்தியாவில் இருந்து வாகன இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்படவுள்ளன. அதற்கு பதிலாக ஜப்பானில் இருந்து அதிக வாகனங்களை இறக்குமதி செய்யும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேநேரம் சீனா வாகனத்துறையில் தமது ஆதிக்கத்தை செலுத்தும் முகமாக இலங்கையில் வாகன உற்பத்தி மையம் ஒன்றை அமைக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வாகனங்களுக்கான கேள்வி குறைந்து வருவதாக தெரிவிக்கப்படும் நிலையிலேயே இந்த நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசாங்கம் முன்னுரிமை வழங்க முன்வந்துள்ளது.

இதன் அடிப்படையில் ஜப்பானில் இருந்து தற்போதைய வாகன இறக்குமதியை காட்டிலும் சீனாவில் இருந்து அதிக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

அத்துடன் பல மில்லியன் டொலர் ஒதுக்கீட்டில் சீனாவின் வாகன உற்பத்தி மையம் அம்பாந்தோட்டையில் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-2)

# பதில் பிரதம நீதியரசரை நியமிக்க முடியாது

## சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவிப்பு

பிரதம நீதியரசர் சேவையில் இருக்கும் பட்சத்தில் பதில் பிரதம நீதியரசர் ஒருவரை நியமிக்க முடியாது என ஃப்ரீமார்ச் சட்டத்தரணிகள் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க தெரிவித்துள்ளார்.

பீபீசி சிங்கள சேவைக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,


பதில் பிரதம நீதியரசர் ஒருவரை நியமிப்பதற்கு அரசு தயாராகி வருதாக ஊடகங்களில் செய்தி வந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு பதில் நீதியரசர் ஒருவரை இலங்கைச் சட்டத்தின்படி நியமிக்க முடியாது எனவும் குணரத்ன வன்னிநாயக்க குறிப்பிட்டார். (ந-2)

# பாடசாலைக்கு பெயர் சூட்டும் நிகழ்வு

யா/திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக்கு யா/பரமேஸ்வரா வித்தியாலயம் என பெயர் சூட்டும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு வித்தியாலய அதிபர் ந.விஜயசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ச.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா, யாழ்ப்பாண வலயக்கல்வி பணிப்பாளர் செ.உதயகுமார், யா/பரமேஸ்வரா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக்கிளை தலைவர் ச.பேரின்பநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-9)








இலங்கை வங்கியின் மெகாவாசி சீட்டிழுப்பில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.மாணிக்கசிங்கி உரையாற்றுவதையும் இலங்கை மத்திய வங்கியின் வடமாகாணக் கிளையின் முகாமையாளர் எஸ்.[illegible] சீட்டிழுப்பில் தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

100

### எகெலப்பொலை

எகெலப்பொலையின் செயல்களால் ஆத்திரமடைந்த ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன் எகெலப்பொலையின் மனைவியையும் பிள்ளைகளையும் கைது செய்து சித்திரைவதை புரிந்ததோடு அவர்களுக்கு மரணதண்டனையும் விதித்துக் கொன்றான். பிள்ளைகளின் தலைகளை உரலிட்டுத் தாயைக் கொண்டு இடிப்பித்தான். மாத்தளை திசாவையாக இருந்த எகெலப்பொலையின் உறவினனான புஸ்வெலவையும் அவனது மனைவி, சகோதரி ஆகியோரையும் ஊவாவில் திசாவையாக இருந்த எகெலப்பொலையின் மைத்துனனையும் அவன் மனைவியையும் போகம்பர ஏரியில் அமிழ்த்திக் கொலை செய்வித்தான். தலதா மாளிகைக்குச் சொந்தமான இரண்டு கிராமங்களைப் பறித்துக் கொண்டான்.



பிரித்தானியாவிலுள்ள நீதிமன்ற நுழைவாயில்-1890



ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

குடவுறன்சே என்ற பிக்குகளையும் சிரச்சேதம் செய்தான். தலதா மாளிகைக்கு அருகில் தேவசங்கிந்த என்றவிடத்தில் பல பிரதானிகளின் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. இரண்டு நாட்களாகக் கண்டி இராச்சியம் அல்லோகல்லோலப்பட்டது. கண்டி மக்கள் துக்கம் அனுஷ்டித்தனர். ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் பயங்கர ஆட்சி அவனில் வெறுப்பையும் அதிருப்தியையும் அளித்தன. இவை அனைத்தாலும் பிரதானிகள், பிக்குகள், மக்கள் ஆகியோரின் ஆதரவை மன்னன் இழக்க நேரிட்டது.


### கண்டி இராச்சியத்தின் தோல்வி

அவ்வேளை ஆங்கிலேயரின் இலங்கை ஆள்பதியாக இருந்த றோபெட் பிறன்றிக் கண்டி மீது படையெடுக்க உகந்த காரணத்தை எதிர் பார்த்திருந்தான். கண்டி மீது எக்காரணம் கொண்டும் படையெடுக்கக்கூடாது என ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகளுக்கான கவர்னரின் கட்டளை இருந்தது. ஆனால், பிரௌன்றின் கண்டிமீது தண்டெடுக்கத் தயாராக இருந்தான். 1803 ஆம் ஆண்டு கண்டி யுத்தத்தில் ஆங்கிலேயரை மிலேச்சத்தனமாக ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் நடாத்தியமை அவனால் மறக்க முடியவில்லை. எகெலப்பொலையின் வற்புறுத்தலும் சேர்ந்து கொண்டது. அதே வேளை 1814 ஆம் ஆண்டளவில் கண்டியில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த பதின்மரை ஆங்கிலேய ஒற்றர்கள் எனச் சந்தேகித்து கண்டி அரசனின் அதிகாரிகள் கைது செய்தனர். அவர்களின் கரம், முக்கு, காது போன்ற அவயங்களை அரிந்து விடுவிக்கப்பட்டனர். அவர்களில் ஏழுபேர் மரணமடைய எஞ்சிய மூவர் ஆள்பதியிடம் நடந்ததை முறையிட்டனர். மேலும் கண்டி மன்னனின் விசுவாசிகள் ஆங்கிலேய அரசின் ஆள்புலத்துக்குள் இரகசியமாக நுழைந்து குடிசைகளுக்குத் தீயிட்டனர். இவ்விரு காரணங்களையும் சாட்டாகக் கொண்டு கண்டி மீது பிரௌன்றன்றிக் படையெடுக்க யுத்தப் பிரகடனம் செய்தான்.

1815 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆங்கிலேயரின் படை கண்டி நோக்கிப் புறப்பட்டது. பிரௌன்றன்றிக், தக்கவாறு திட்டமிட்டு படையெடுத்திருந்தான். அவன் இந்தியாவிலிருந்து படையுதவி பெற்றதுடன், கொழும்பு, காலி, அப்பாந்தோட்டை, நீர்கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய கோட்டைகளிலிருந்தும் கண்டியை நோக்கி வீரர்கள் புறப்பட்டு வந்தனர். கண்டியின் மகா அதிகாரி

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

மொல்லிக்கொடை தன் ஆதிக்கத்திலிருந்த நான்கு கோறளையைக் கையளித்துச் சரணடைந்தான். பெப்ரவரி 14 ஆம் திகதி எவ்வித எதிர்ப்புமின்றி கண்டி நகரை ஆங்கிலேயர் சென்றடைந்தனர். ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் கண்டியை விட்டு ஓடி கல்ஹேவத்தையில் உடுப்பிட்டியே ஆராய்ச்சியின் வீட்டில் ஒளிந்திருக்கும் போது எகெலப்பொலை உறவினனான எக்நெலிகொடை நிலாமையால் கைது செய்யப்பட்டு ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டான். 1816 ஆம் ஆண்டு ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனும், அவனது உறவினர் களான அறுபது பேரும் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டு கோர்ண்வலிஸ் என்ற கப்பலில் வேலூருக்கு நாடு கடத்தப்பட்டார்கள். நாடு கடத்தும் போது ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் ஆள்பதிக்கு கூறிய வார்த்தைகள், "எகெலப்பொலை விடயத்திலும் மொலிக்கொடை விடயத்லும் யாக்கிரதையாக இருங் கள். அவர்கள் என்னை ஏமாற்றியது போல உங்களை ஏமாற்ற நாளெடுக் காது" என்பதாகும்.



பிரித்தானிய இராணுவக் கொடி-1815-1833

1815வரை அந்நியரால் கைப்பற்றப்படாது சுதந்திர இராச்சியமாக இருந்த கண்டியின் சுதந்திரம் பறிபோனது. ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கனின் கொடூரமான செய்கைகள் அனைவரினதும் ஆதரவை இழக்க வைத்தது. நாட்டையும் இழக்கவைத்தது.

# ஆங்கிலேயர் காலம்

### கண்டி உடன்படிக்கை-1815

1815 ஆம் ஆண்டு கண்டியைக் கைப்பற்றியதும் ஆங்கிலேயர், கண்டிப் பிரதானிகளுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர். கண்டியப் பாரம்பரியம் பழக்கவழக்கங்கள், சட்டதிட்டங்கள் பாதிக்காத விதத்தில் பிரதானிகளுடன் உடன்படிக்கை நடந்தது. கண்டிக்கு உரிமையுடைய ஆட்சியாளன் எவனும் இல்லாததால், கண்டிப் பிரதானிகளுடன் ஒப்பந்தம் நடந்தது. எகெலப்பொலை, மொல்லிக்கொடை ஆகியோரும் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர். தன்னைக் கண்டிக்குரிய அரசனாக ஆங்கிலேயர் நியமிப்பர் என எகெலப்பொலை கடைசி வரை நம்பியிருந்தான். அவன் நம்பபிக்கை நிறைவேறவில்லை. சிங்களப் பிரதானிகளுடன் செய்து கொள்ளப் பட்ட உடன்படிக்கையில் பின்வரும் அம்சங்கள் அடங்கியிருந் தன.

1.கண்டியின் அரசுரிமையை ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கனும் அவன் உறவினர்களும் இழக்கின்றார்கள். அவர்கள் ஆங்கிலேய அரசின் எதிரிகளாக கருதப்படுவதால், அவர்கள் எவரும் கண்டியில் வசிக்கமுடியாது. கண்டியை விட்டு வெளியேறிவிட வேண்டும்.

2.இனிவரும் காலத்தில் பிரித்தானிய அரசரே கண்டியின் அரசராகவும் கருதப்படுவார். கண்டி இராச்சியம் பிரித்தானிய அரசனின் முடியாட்சியின் கீழ் கொண்டு வரப்படுகின்றது. பிரித்தானிய மன்னனுக்குப்பதிலாக இலங்கை முழுதையும் அவரால் நியமிக்கப்பட்ட ஆள்பதியொருவர் நிர்வகிப்பர்.

3.கண்டிப்பிரதானிகள் இதுவரை அனுபவித்துவந்த சலுகைகள், உரிமைகள், பதவிகளை, தொடர் ந்து வகிக்கலாம். சமயசுதந்திரம் பாதிக்கப்படமாட்டாது. பௌத்த மதம், பௌத்த சங்கம், பௌத்த ஆலயங்கள் எதுவித பதிப்புமின்றி, இருந்தவாறே தொடர்ந்து இயங்கலாம்.

4.மரணதண்டனை விதிக்கும் அதிகாரம் ஆள்பதிக்கே உரியது. கொடூரமான நாகரிகமற்ற தண்டனைகள் இனி வழங்கக் கூடாது. ஆங்கில நீதிச்சட்டப்படி விசாரித்தே நீதிவழங்கப்படும்.

5.கண்டி வியாபாரம் ஆங்கிலேய ஆள்பதியின் எண்ணப்படியே இனி மேல் நடக்கும்.

இவ்வாறு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு பிரதானிகள் ஒத்துக்கொண்டனர். இதன்மூலம் இலங்கை இராச்சியம் ஆங்கிலேய முடியாட்சிகுரியதாகியது. (தொடரும்)




ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கனைத் தோற்கடித்த ஆள்பதி றெபேட் பிறவுன்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

285




## கைக்கூலி கணக்கையா

ரொம்ப நாட்களுக்கு முன்னால் அதாவது ஆங்கிலேயரின் ஆட்சி இருந்தபோது மேட்டுக் குப்பம் என்ற ஊரில் ஒரு கணக்குப்பிள்ளை இருந்தார். அவர் இலஞ்சம் வாங்குவதில் கைதேர்ந்தவர். ஏழை எளியவர் என்று இரக்கப்படமாட்டார். பணக்காரர்களிடமோ கறந்து வாங்கிவிடுவார். எனவே, எல்லோரும் அவரை **கைக்கூலி கணக்கையா** என்று அழைத்தனர். அவருடைய உண்மைப்பெயர் கந்தசாமி.

ஒருமுறை நிலவரி கட்ட அப்பகுதியில் இருந்த ஒரு நிலத்தின் சொந்தக்காரர் பணத்தை அனுப்பினார். அவர் ஒரு ஜில்லா கலெக்டர். ஆனால் கணக்கையாவுக்கு கலெக்டராக இருந்தால் என்ன? கவர்னர், ஜெனரலாகத் தான் இருந்தால் என்ன? தனக்குக் கொடுக்கும் மாமூலை கொடுத்தால்தான் அதை ஏற்கமுடியும் என்று கூறி அனுப்பிவிட்டார்.

இதேசமயம் பலர் அந்தக் கணக்குப் பிள்ளையை பற்றிய இலஞ்சப்புகார்கள் கொண்ட மனுக்களை பிரதிகள் எடுத்து கலெக்டருக்கு ரெவின்யூ போட்டாருக்கும்' கவர்னருக்கும். கவர்னர் ஜெனரலுக்கும் லண்டனில் உள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் அனுப்பி வைத்தனர்.

பிரிட்டிஷ் அரசாங்கம் அம்மனுவைக் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க ஒரு கமிட்டியை நியமித்தது. அக்கமிட்டி புகார்களை எல்லாம் பரிசீலித்துப் பார்த்து முடிவில் கந்தசாமி ஒரு வருட காலத்திற்கு ஒரு தீவில் உணவு பொருட்களுடன் விட்டால் அதுவே தண்டனை என அபிப்பிராயத்தையும் தெரிவித்தது. லண்டன் முடிவு கந்தசாமிக்கு அறிவிக்கப்பட்டது. அவர் தமக்கு கொடுக்கப்படும் உணவுப் பொருட்களோடு பத்து ரீம் காகிதமும் மைக்குப்பிகளும் பேனாக்களும் பென்சில்களும் வேண்டுமென விண்ணப்பித்துக் கொண்டார். ஏதோ ஸ்ரீராம ஜெயம் எழுதி காலங்கழிக்கப் போகிறார் என நினைத்து மேலதிகாரிகள் அவற்றைக்கொடுக்க உத்தரவு போட்டனர்.



கணக்கையா தீவில் விடப்பட்டதும் தாம் கொண்டுவந்த காகிதங்களை நோட்டுக்களாகத் தைத்து கோடுகளைக் கிழித்து எழுதலானார். பல வகைப்பட்ட எண்களை எழுதி கூட்டிக்கழித்து, பெருக்கி, வகுத்து, எழுதி நோட்டு நோட்டாக குவித்தார்.

ஒருநாள் ஒரு கப்பல் அத்தீவிற்கு வர அதை நிறுத்தி அதற்கு நூறுரூபாய் வரிபோட்டு பணத்தை வாங்கிக்கொண்டு ரசீது கொடுத்து அனுப்பினார். அந்தக் கப்பல் தலைவனும் ஆங்கில அரசாங்கத்தால் போட்ட உத்தரவு என நினைத்து பணத்தைக் கொடுத்து விட்டான். ஏனெனில் கணக்கையாவின் முன் மலைபோல கணக்குப் புத்தகங்கள் குவிந்து கிடந்தனவே.

இதுபோல கணக்கையா அங்கு வந்த ஒவ்வொரு கப்பலிடம் இருந்தும் பணம் வசூலித்து ரசீது கொடுத்தான். கணக்கையா கொடுத்த ரசீதுகள் இங்கிலாந்திற்குச் செல்ல அது பற்றி மீண்டும் விசாரணை தொடங்கியது. அதுவும் கந்தசாமியின் திரு விளையாடல் எனத் தெரிந்து அவர் தண்டனை அனுபவிக்க வேண்டியதில்லை எனக்கூறி அரசாங்கம் அவரை ஊருக்கே அனுப்பிவிட்டது.

## அம்புலிமாமா கதைகள்

## பாட்டுப் பிறந்தது அன்று!

பூலோகத்தில் திடீரென ஒரு சமயம் பஞ்சம் உண்டாக அதன் காரணம் தெரியாமல் கடவுளே திகைத்துப் போனார். பூமியில் நீர் வளம், நில வளம் இருந்தும் பஞ்சம் ஏன் வந்தது? என்று கடவுள் தேவர்களிடம் கேட்க அவர்கள் சுவாமி! நீங்கள் படைத்த மனிதர்கள் ஒரே வேலையை திரும்பத் திரும்பச் செய்ததால் சலித்துப்போய் அந்த வேலையை நிறுத்தி விடுகின்றனர்.

வருடம் முழுவதும் விவசாயம் செய்து சலித்துப்போய் அதை நிறுத்திவிட்டனர் என்றனர்.

ஓ! அதுவா காரணம்! புரிந்து கொண்டேன். அப்படியானால் அவர்களுடைய மனச்சோர்வை நீக்க ஒரு மருந்து தேவைப்படுகிறது. அதைப்பருகினால் உடனே அவர்கள் சலிப்பு நீங்கிப்



புத்துணர்ச்சி பெறுவார்கள். அந்த மருந்தை இப்போதே நான் உருவாக்குவேன் என்று கடவுள் கூற, அது என்ன மருந்து? அதைக்குடித்தால் இனிக்குமா? என்று தேவர்கள் கேட்க அதைக்குடிக்கமுடியாது.

அது அவர்கள் நாவினில் உதயமாகும். அது தோன்றியவுடன் அதன் இனிமையில் அதனுடன் கூடவே தாளமும் உண்டாகும். அதுதான் பாட்டு! ஆம்! மனிதர்கள் சலிப்படையும் போதெல்லாம் அவர்கள் வாயிலிருந்து பாட்டுவரும். அதற்கேற்ப கால்கள் ஜதி போட அவர்களுடைய சலிப்பு பறந்தே போகும் என்றார்.

சரிதான்! அந்தப் பாட்டே சலித்துவிட்டால்? என்று தேவர்கள் கேட்க பாட்டு சலிக்காதபடி வரம் தருகிறேன் என்றார் கடவுள்.

அதனால்தான் இன்றும் நாம் பாட்டுக்கேட்டால் அல்லது பாடினால் நம்மையறி யாமல் பாட்டுக்குத் தாளமும் போடுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாத இராசி பலன்

# 16.11.2012–15.12.2012

## பொன், பொருள் வந்து சேரும்; புகழ் கூடும் பொருளாதார நிலை சிறப்பாக அமையும்




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

**வசதி வாய்ப்புகள் பெருகும் நேரம்!**

**எதிலும் இரட்டித்த சிந்தனையைக் கொண்டிருக்கும் கும்பராசி நேயர்களே!**

எதையும் வெளிப்படையாகப் பேசுபவர்கள் நீங்கள். யாரையும் உடனடியாக நம்பமாட்டீர்கள். கற்ற கல்வியைக்காட்டிலும் பெற்ற அனுபவம் உங்களுக்கு அதிகமாகவே இருக்கும். அதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல பிரியப்படுவீர்கள். பிறரை விமர்சிப்பதன் மூலம் பிரச்சினை களை நீங்கள் விலைக்கு வாங்க நேரிடும். உங்களைப்பற்றி யாராவது தவறாகப் பேசினால், அதை ஒவ்வொரு வரிடமும் எடுத்துச் சொல்லிக் கொண்டேயிருப்பீர்கள்.

உங்களுக்கு இந்தக் கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது தனலாபாதிபதி வக்ரமாக இருக்கிறார். எனவே, பொருளாதாரத்தைப் பொறுத்த வரை மாதத் தொடக்கத்தில் மந்தநிலையில் இருந்தாலும், சுக்ர பெயர்ச்சிக்குப் பிறகு சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும். வாழ்க்கைத் தேவைகள் ஒவ்வொன்றாகப் பூர்த்தியாகும். அஷ்டமத்துச் சனி விலகியதால் இனி அடுக்கடுக்காக நல்ல தகவல்கள் வந்து கொண்டே இருக்கும்.

ஆயினும், 4 ஆம் இடத்தில் கேது இது வரை சஞ்சரித்துவந்தபோது வைத்தியச் செலவுகளும், விரயங்களும் உங்களை ஆட்கொண்டிருக்கலாம். உற்றார், உறவினர்களுக்கும் உங்கள் பொன்னான நேரத்தை செலவழித்து, பொருளையும் விரயம் செய்திருக்கலாம். இனி அந்த நிலை மாறும். இராகு, கேது பெயர்ச்சிகள் இந்த மாதம் நடைபெற இருப்பதால், யோக பலன்கள் உங்களுக்கு வந்து சேரப்போகிறது. 3 ஆம் இடத்துக் கேதுவிற்கும் 9ஆம் இடத்து இராகுவிற்கும் முறையாக சர்ப்பசாந்தி பரிகாரத்தை செய்தால், நிறைவான வாழ்க்கை அமையும்.

**சுக்ர பெயர்ச்சியும் புதனின் பெயர்ச்சியும்!**

நீச்ச கதியில் இருந்த சுக்ரன் நவெம்பர் 17 முதல் துலாத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 9 இற்கு அதிபதி பலம் பெறும் இந்த நேரத்தில் பொன், பொருள் வந்துசேரும். புகழ் கூடும். பொருளாதாரநிலையில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் சிறப்பாக இருக்கும். தொழில் வளர்ச்சி கூடும்.

டிசெம்பர் 12 ஆம்திகதி விருச்சிகத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போவதாலும், டிசம்பர் 5 ஆம் திகதி விருச்சிகத்தில் புதனும் சேரப்போவதால் புதசுக்ர யோகம் செயற்படும். எனவே, இடம், பூமி வாங்கும் வாய்ப்பு எளிதில் உருவாகும். வாகன மாற்றம் செய்யவும் முன்வருவீர்கள். சேமிப்பு உயரும். மாமன் வழியில் ஆதாயம் உண்டு.

**நலன் தரும் இராகு, கேது பெயர்ச்சி!**

வாழ்க்கையில் முன்னோக்கிச் செல்ல வைப்பது பின்னோக்கிச் செல்லும் கிரகங்களான இராகு, கேதுக்கள்தான். அதன் பெயர்ச்சி, டிசெம்பர் 2ஆம்திகதி நிகழ இருக்கிறது. துலாத்தில் இராகு சஞ்சரிக்கும் போது, பெற்றோர் வழியில் ஆதாயம் கிட்டும். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். மேடகேதுவின் ஆதிக்கத்தால் உடன்பிறப்புக்கள் வழியில் ஒரு நல்ல காரியம் நடைபெறும். கடன் சுமையைக் குறைக்க அவர்கள் கைகொடுத்து உதவுவர். இடம்மாற்றம், ஊர்மாற்றம், உத்தியோக மாற்றங்கள் எதிர்பாராத விதத்தில் வந்து சேரலாம்.

**விரயஸ்தான செவ்வாயின் ஆதிக்கம்!**

மாதக்கடைசியில் டிசெம்பர் 15 ஆம் திகதி விரயஸ்தானத்தில் செவ்வாய் உச்சம் பெறப்போகிறார். இந்தக்காலத்தில் சொத்து விற்பனையால் தனலாபம் கிடைக்கப் போகிறது. சொந்த பந்தங்களின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நூதன கருவிகளின் சேர்க்கை உண்டு.

இந்த மாதம் சனீஸ்வரரையும் ஆதி அந்தபிரபுவையும் வழிபடுவது நல்லது. சனிகவசம் பாடினால் சந்தோசம் கிடைக்கும்.

இந்த மாதம் சுக்ர பலத்தால் சுகங்களும் சந்தோஷங்களும் கூடும் என்றே சொல்லலாம். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். கணவன், மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும். காரியவெற்றிக்கு நீங்கள் வழிபாடு செய்த தெய்வங்கள் எல்லாம் கைகொடுத்து உதவப் போகிறது. பக்கத்து வீட்டாரின் பகை மாறும். தங்கம், வெள்ளி தாராளமாக வந்து சேரும். தடையாக இருந்த கல்யாணம், குழந்தைப்பேறு ஆகியவை தானாகவே நிறைவேறும். இழந்தவைகளை மீட்கவைக்கும் இந்த நேரத்தில் இல்லம் கட்டி குடியேறும் வாய்ப்பு கூட கைகூடி வரலாம். இராகு, கேதுக்களின் வழிபாடு யோகத்தை வழங்கும்.

# சிவல்புரி சிங்காரம்

## அரவு கிரகத்தின் பெயர்ச்சி அற்புத பலன்களை தரும் எண்ணற்ற மாற்றங்கள் நிகழும்; பகை, நட்பாகும்!




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**வரவும் செலவும் சமமாகும்!**

**எல்லோரிடமும் எளிதில் பழகும் மீன இராசி நேயர்களே!**

நல்லவர்கள் என்று எல்லோரிடமும் பெயர் எடுத்துக்கொள்ள விரும்புவீர்கள். மற்றவர்களுக்கு மதிப்புக் கொடுப்பதன்மூலம் உங்கள் பெருமையை உயர்த்திக் கொள்வீர்கள். கொடுத்த வாக்கை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என்ற எண்ணம் உங்கள் உள்ளத்தில் பதிந்திருக்கும். ஆன்மீக நாட்டம் அதிகம்பெற்ற நீங்கள் பழைய சடங்கு சம்பிரதாங்களில் நம்பிக்கை வைத்திருப்பவர்களாகவும் விளங்குவீர்கள்.

உங்களுக்கு இந்த கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது மாதத் தொடக்கத்தில் புதனும் சுக்ரனும் பரிவர்த்தனை அடைவதால், பொருளாதாரநிலை சிறப்பாக இருக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை முதல் அத்தியாவசியப் பொருட்களின் சேர்க்கைவரை ஏற்படும். குருச்சந்திர யோகத்தோடு மாதம் தொடங்குவதால், தொழில் வளர்ச்சியடையும். நண்பர்களின் நல்லாதரவும் கிடைக்கும்.

அஷ்டமத்து சனியைப் பற்றி அதிக கவலைப்பட வேண்டாம். 12 ஆம் இடத்திற்கு அதிபதியான சனி 8 இல் சஞ்சரிக்கும்போது விபரீத இராஜயோக அடிப்படையில் நல்ல பலன்களை அள்ளி வழங்கப்போகிறது. பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். பிரபலஸ்தர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து காரியங்களை முடித்துக் கொடுப்பர். குரு, இராசிநாதனாக மட்டுமல்லாமல், பத்தாம் இடத்திற்கும் அதிபதியாக இருந்து வக்ரம் பெறுவதால் இந்த வக்ர இயக்க காலத்திற்குள் பல நல்ல காரியங்களை முடித்து வைப்பர். குருகவசம்பாடி குரு வழிபாட்டை முறையாக செய்துவருவது நல்லது.

இராகு, கேதுக்களின் பெயர்ச்சியும் இம்மாதம் நடைபெற இருப்பதால் சர்ப்பக் கிரகங்களின் பெயர்ச்சியும் உங்களுக்கு சகலயோகத்தையும் வழங்கும் விதத்தில் இருக்கிறது. 2இல் சஞ்சரிக்கும் கேதுவும் 8 இல் சஞ்சரிக்கும் இராகுவும் உங்களுக்கு எண்ணற்ற மாற்றங்களை வழங்கப் போகிறார்கள். பகையான உறவுகள் நட்பாகும். பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். வீடு மாற்றங்கள், நாடுமாற்றங்கள் எதிர்பார்த்தபடி நடைபெறும். அரவுக் கிரகத்தின் பெயர்ச்சி உங்கள் வாழ்க்கையில் அற்புத பலன்களை வழங்கப்போகிறது. அவ[illegible]யம் கட்டும் வாய்ப்பையும் வழங்கப் போகிறது.

**சுக்ர பெயர்ச்சியும் புதனின் பெயர்ச்சியும்!**

நவெம்பர் 17 ஆம் திகதி துலாத்திலும் டிசெம்பர் 12 ஆம்திகதி விருச்சிகத்திலும் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக எதிரிகள் பலமிழப்பர். இல்லம் தேடி நல்ல செய்திகள் வந்து சேரும். வங்கிகளின் ஒத்துழைப்போடு வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளப் போகிறீர்கள். டிசம்பர் 5 ஆம் திகதி விருச்சிகத்தில் புதனும் இணைவதால் மாதத்தின் மையப்பகுதியிலிருந்தே மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து கொண்டேயிருக்கும்.

**நன்மை தரும் ராகு- கேது பெயர்ச்சி!**

டிசம்பர் 2 ஆம் திகதி துலாத்தில் ராகுவும் மேடத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். அள்ளிக் கொடுக்கும் ராகு அஷ்டமத்தில் சஞ்சரித்தாலும் அதன்பார்வை தொழில் ஸ்தானத்தில் பதிவதால் சர்ப்ப சாந்திகளை செய்து இராகுவை வழிபட்டால் தொழில் வளர்ச்சி மேலோங்கும். சாதாரண வைத்தியத்திலேயே ஆரோக்கியம் சீராகிவிடும். கேது பலத்தால் குடும்ப சுமை கூடும். கொள்கைப் பிடிப்ப்ப தளர்த்திக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். யாருக்கும் வாக்கு கொடுக்கும் முன் யோசிப்பது நல்லது. குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பதன் மூலம் குழப்பங்களிலிருந்து விடுபட இயலும்.

**உச்ச செவ்வாய் தரும் உன்னத பலன்**

மாதக் கடைசியில் டிசம்பர் 15 ஆம் திகதி மகரத்தில் செவ்வாய் உச்சம் பெறப்போகிறார். 2, 9 க்கு அதிபதி உச்சம் பெறும் இந்தநேரம் அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும். ஆதாயம் இரு மடங்காகும். மேலதிகாரிகளின் பாராட்டுதல்களோடு உத்தியோகஸ்தர்கள் மேன்மை காண்பர். சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை அமையும். அரசு வழியில் அல்லது அதிகாரிகளால் பாராட்டுகளும் விருதுகளும் பெறக்கூடிய நேரமிது.

இம்மாதம் நந்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். நலம் யாவும் வீடு வந்து சேரும்.

இம்மாத தொடக்கத்தில் நல்ல வாய்ப்புகள் உங்களை தேடி வந்து சேரும். குடும்ப சுமை கூடினாலும் அருகிலிருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இந்த மாதத்தில் நடைபெறத் தொடங்கும். பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். பிரச்சினைக்குரிய திருமணங்கள் சுமூகமாக முடியும்.

இராகு, கேது பெயர்ச்சிக்குப் பின்னால் கணவன்- மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். சர்ப்பக்கிரக வழிபாடு சந்தோஷத்தை தரும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கு, பூனைக்கு அப்பம் பங்கிட்ட... கதையானது, அரசின் அதிகாரப்பகிர்வு!

## 13வது இற்கு கண்டம் நீங்குமா?

கே. சஞ்சயன்

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிய தமது நிலைப்பாட்டை அல்லது தீர்வுத் திட்டத்தை ஒருபோதும் வெளிப்படுத்தாமல் தட்டிக்கழித்து வந்த அரசாங்கத்தின், உண்மையான நிகழ்ச்சிநிரல் என்னவென்று இப்போது ஓரளவுக்கு வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளது. மாகாணசபைகளை ஒழிப்பதுதான் அரசாங்கத் தின் தீர்வுத் திட்டம் என்பதை இப்போது விளங்கிக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

அண்மையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, மாகாணசபைகளை ஒழிக்க வேண்டும் என்று பற்றவைத்த நெருப்பு இப்போது நன்றாகவே கொளுந்து விட்டெரியத் தொடங்கிவிட்டது. அரசாங்கக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தேசிய சுதந்திர முன்னணியும் ஜாதிக ஹெல உறுமயவும் கோத்தபாயராஜபக்சவின் கருத்தை அடுத்து மாகாணசபைகளை ஒழித்தேயாக வேண்டும் என்று போர்க்கொடி தூக்கியுள்ளன.

அதுமட்டுமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கையில் போய்விடும் என்பதால் வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்த விடமாட்டோம் என்று அமைச்சர்கள் விமல் வீரவன்சவும், சம்பிக்க ரணவக்கவும் சூளுரைத்துள்ளனர்.

கிழக்கு மாகாணசபைக்குத் தேர்தல் நடத்தப்பட்டபோது இப்படியொரு சர்ச்சையை அவர்கள் கிளப்பவில்லை. காரணம், அங்கு தமிழர்களால் அதிகாரத்தைப் பெறமுடியாது என்ற நம்பிக்கையே, வடக்கு மாகாண சபையின் அதிகாரம் தமிழர்களிடம் கொடுக்கப்பட்டுவிடக் கூடாது என்ற, உச்சக்கட்ட இனவாதத்தை, இவர்களின் இந்தக் கருத்து வெளிப்படுத்தியுள்ளது.

மாகாணசபைகளை ஒழிக்க வேண்டும் என்ற கருத்தை இவர்கள் பொதுப் படையாக முன்வைப்பது வேறு, வடக்கில் மட்டும் தேர்தலை நடத்த விடமாட்டோம் என்பது வேறு.

மாகாண சபைகளை ஒழித்தேயாக வேண்டும் என்று கூறும் இந்த இரு கட்சிகளையும் சேர்ந்தவர்கள் மாகாணசபைகளில் இப்போதும் அமைச்சர்களாகவும் உறுப்பினர்களாகவும் இருந்து வருகின்றனர். இதிலிருந்து தாம் அதிகாரம் செலுத்தக்கூடிய இடங்களில் மாகாணசபைகள் இருக்க வேண்டும், தமிழர்கள் அதிகாரம் செலுத்தக் கூடிய இடங்களில் அவை இயங்கக் கூடாது என்பதே இந்தக் கட்சிகளின் அடிப்படைக் கொள்கை என்பது தெளிவாகிறது.

ஆளும் கூட்டணியில் உள்ள இந்தக் கட்சிகள் மட்டுமன்றி, அரசாங்கத் தரப்பில் உள்ள இடதுசாரிகள் தவிர்ந்த ஏனைய கட்சிகள் எல்லாமே இதே கருத்தை வலியுறுத்தவே செய்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடுகூட இதுவேதான்.

13-வது திருத்தத்தை ஒழிக்க வேண்டும் என்ற சர்ச்சையை கோத்தபாய ராஜபக்ச கிளப்பிவிட்டபோது அவ்வாறான நோக்கம் எதுவும் அரசாங்கத்துக்கு இல்லை என்று கூறியிருந்தார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல. ஆனால், பின்னர் அவரும் சரி, அரசாங்கத்தில் அதிகாரம் பெற்றவர்களான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் அமைச்சர் பசில் ராஜபக்சவும் வெளியிட்டுள்ள கருத்துக்களும் சரி அதனை உறுதிப்படுத்துவது போலவே உள்ளன.

முன்னதாக தேவைப்பட்டால் 13-வது திருத்தத்தை ஒழிப்பதற்காக 19-வது திருத்தத்தை அரசாங்கம் கொண்டுவரும் என்று கூறியிருந்தார் அமைச்சர் பசில்ராஜபக்ச. ஆனால், கடந்த வாரம் அவர் ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டபோது மாகாணசபைகளுக்குப் பதிலாக தமிழர்களின் குறைகளை நீக்கும் வகையில் புதிய அதிகாரப் பகிர்வுத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்காக அரசியலமைப்பில் 19-வது திருத்தத்தைக் கொண்டுவரவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இந்தத் திருத்த வரைபு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும், மக்களுக்கு அர்த்தமுள்ள-கூடுதல் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க மாகாணசபை முறைமையை மாற்றியமைக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

ஆக மொத்தத்தில் 13-வது திருத்தத்தை இல்லாதொழித்து, மாகாண சபை முறையையே இல்லாமல் செய்துவிடவேண்டும் என்பதில் அரசதரப்பு உறுதியாக உள்ளது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

இதனைச் செய்வதற்கு அரசாங்கத் தரப்புக்கு இருக்கின்ற ஒரே சிக்கல் இந்தியாதான்.

மாகாணசபை முறையின் ஊடாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் 13-வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது.

கடந்த முதலாம் திகதி ஜெனீவாவில் நடைபெற்ற பூகோளகால மீளாய்வுக் கூட்டத்தில் உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி 13-வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்தியாவை பகைத்துக் கொண்டு மாகாணசபைகளை, 13-வது திருத்தத்தை ஒழிப்பதுதான் அரசாங்கத்துக்கு இப்போது உள்ள ஒரே சிக்கல்.

ஆனால், மாகாணசபைகளை- 13-வது திருத்தத்தையும் ஒழிக்கும் அரசாங்கத்தின் முயற்சியை இந்தியா கண்டிக்கவில்லை என்ற மனக்குறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரிடம் உள்ளதையும் காணமுடிகிறது.

கடந்த மாதம் 13 பிளஸ் என்று கூறிவந்த அரசாங்கம் இப்போது 13- வது திருத்தத்தையே ஒழிக்கப் போவதாகக் கூறுகிறது. அதற்காக 19-வது திருத்தத்தைக் கொண்டு வரப்போவதாகவும் கூறுகிறது. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இதற்கான வரைபு சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் பசில் ராஜபக்ச கூறியுள்ளார்.

அர்த்தமுள்ள அதிகாரங்களைப் பகிரும் வகையில் மாகாணசபைகளை- 13வதுதிருத்தத்தை ஒழிக்கப் போவதாகவும் அதற்கான வரைவை தெரிவுக்குழுவிடம் முன்வைக்கவுள்ளதாகவும் கூறியுள்ள அவர் அதற்கு மாறாக அரசாங்கம் எதை முன்வைக்கப்போகிறது என்று கூறவில்லை.

அதாவது, அரசாங்கத்தின் இப்போதைய இலக்கு, தெரிவுக்குழுவின் மூலம் அடைய நினைத்துள்ள இலக்கு, மாகாண சபைகளையும் அதை உருவாக்கிய 13வது திருத்தத்தையும் இல்லாமல் செய்வதுதான்.

இதற்குப் பதிலாக எத்தகைய தீர்வை அரசாங்கம் முன்வைக்கப் போகின்றது என்ற தெளிவு அரசாங்கத் திடம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், நிச்சயமாக ஒன்றை மட்டும் கூற முடியும். தமிழர்கள் சட்டரீதியாக அதிகாரங்களைப் பிரயோகிக்கக் கூடிய நிர்வாக அமைப்பு எதையும் அரசாங்கம் உருவாக்கிக் கொடுக்கப் போவதுமில்லை; உருவாக்கவிடப் போவதுமில்லை.

ஏனென்றால், மாகாணசபைகளே ஒப்பீட்டளவில் குறைந்தபட்ச அதிகாரங்களை பகிர்ந்துகொள்ளும் ஒரு நிர்வாக அலகுதான். இதையும் இல்லாமல் செய்து விடவேண்டும் என்று வலியுறுத்தும் அரசாங்கம் ஒருபோதும் இன்னொரு நிர்வாக அலகை உருவாக்கப்போவதில்லை.

இதுவரை அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதை வெளிப்படுத்தவில்லை. தெரிவுக் குழுவே அதைத் தீர்மானிக்கும் என்று கூறிவந்தது. இப்போது தெரிவுக் குழு தீர்வுத்திட்டம் ஒன்றை உருவாக்கிக் கொள்ளுமா, இல்லையா என்பதைவிட 13வது திருத்தத்தை ஒழிக்கப் பயன்படுத்தப்படும் என்பது மட்டும் உறுதியாகியுள்ளது.

மாகாணசபைகள் மூலம் பகிரப்பட்ட குறைந்தளவிலான அதிகாரங்களையும் மத்திய அரசு பிடிங்கிக்கொள்வதற்கான களமாகவே தெரிவுக்குழு பயன்படப்போகிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருந்து வந்த சந்தேகத்தை அரசாங்கமே இப்போது உறுதிப்படுத்தியுள்ளது. 13வது திருத்தத்தை ஒழிப்பதற்கு, தெரிவுக்குழுவில் அதை ஒரு யோசனையாக முன்வைக்கத் திட்டமிட்டுள்ள அரசாங்கத்தினால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான திட்டம் ஒன்றை மட்டும் வரைய முடியாது போனது எப்படி என்பது தான் கேள்வி.

அரசாங்கம் ஒரு முடிவுடன்தான் காய்களை நகர்த்துகிறது. மாகாணசபைகளை இல்லாதொழிக்கும் வகையில் 13வது திருத்தத்தையே அரசியல் அமைப்பில் இருந்து நீக்கிவிடுவதுதான் அந்தத் திட்டம்.

கோத்தபாய ராஜபக்ச ஊடகங்களின் மூலம் தொடக்கிவிட்ட போரினதும், சம்பிக்க ரணவக்கவும் விமல் வீரவன்சவும் நடத்துகின்ற பிரச்சார யுத்தத்தினதும், பசில் ராஜபக்ச, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆகியோர் நடத்தும் இராஜதந்திரப் போரினதும் இலக்குகள் எல்லாமே ஒன்றாகவே தெரிகின்றன. இவர்கள் ஒவ்வொரு வரும் பயணிக்கின்ற பாதைகள் வெவ்வேறாக இருந்தாலும் பயணிப்பது என்னவோ, 13வது திருத்தத்தை ஒழிப்பதை குறியாகக் கொண்டுதான்.

இந்த நிலையில் இந்தியா என்ற கவசத்திற்குள் இருந்தாலும் 13வது திருத்தத்தினதும் மாகாணசபைகளினதும் ஆயுள் எந்தளவுக்கு வலிமையானது என்பது கேள்விக்குரியதாகவே மாறியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. உள்ளக அறிக்கைகளினால் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படாது

## பாலித கோஹண தெரிவிப்பு

(கொழும்பு) —

**ஐக்கிய நாடுகள் அமைப்பின் உள்ளக அறிக்கைகளினால் இலங்கைக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாது என அந்த அமைப்பிற்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி டாக்டர் பாலித கோஹண தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை ஐக்கிய நாடுகள் அமைப்பினால் வெளியிடப்பட்ட இலங்கை தொடர்பான உள்ளக அறிக்கை குறித்தே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில்,

ஐக்கிய நாடுகள் அமைப்பு என்பது அதீத அதிகாரங்களைக் கொண்ட ஓர் நிறுவனம் கிடையாது.

ஐக்கிய நாடுகள் அமைப்பானது உறுப்பு நாடுகளினால் கட்டமைக்கப்பட்ட ஓர் நிறுவனமாகும். பிரகடனங்கள் மற்றும் சில நியதிகளின் அடிப்படையிலேயே ஐக்கிய நாடுகள் அமைப்பு உறுப்பு நாடுகளில் பணியாற்ற முடியும். அண்மையில் வெளியிடப்பட்ட உள்ளக அறிக்கையின் சில இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதனைப் போன்று ஐக்கிய நாடுகள் அமைப்பினால் தன்னிச்சையான தீர்மானங்களை எடுத்து இயங்க முடியாது.

ஐக்கிய நாடுகள் அமைப்புடன் மிக நெருக்கமாக நாம் செயற்பட்டோம். உயர் அதிகாரிகள் அடிக்கடி இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். இவ்வாறான ரீதியில் இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் அரசாங்கம் காட்டிய அர்ப்பணிப்புக்களை அண்மைய மீளாய்வு அறிக்கை முற்றுமுழுதாக உதாசீனம் செய்துள்ளது.

குறிப்பாக பொது மக்கள் உயிரிழப்புக்கள் தொடர்பிலான கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ள முடியாது என பொதுமக்களின் உடைகளில் போராடிய பாலித கோஹண தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் மரணங்களை பொது மக்களின் இழப்புக்களாக கருத முடியாது. மேலும் சட்டத்தரணி என்ற ரீதியில் இந்த அறிக்கையின் பல இடங்களில் சிக்கல்கள் இருப்பதாகவும் சட்ட ரீதியாக அந்த தவறுகளுக்கு எதிராக சவால் விடுக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-2)

# எதிரணிக்கு ஆலோசனை வழங்க சட்டத்தரணி குழு

பிரதம நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெற்றுள்ள எதிரணி உறுப்பினர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக சட்டத்தரணிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சி தலைவர் காரியாலயம் அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரமே சட்டத்தரணிகள் குழு நியமிக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமுகமளிக்குமாறு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில் அந்த திகதிக்கு முன்னர் சட்டத்தரணிகள் குழு நியமிக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயம் அறிவித்துள்ளது. (ந-2)




★1493-கொலம்பஸ் முதல்நாள் தான் கண்ட தீவின் கரையை அடைந்து அதற்கு சான் ஜுவான் பட்டீஸ்டா எனப் பெயர் சூட்டினார்.

★1794-அமெரிக்கப் புரட்சிப் போரின் பின்னால் எழுந்த சில பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு ஐக்கிய அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.

★1816-வார்சா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

★1881-உக்ரேனில் ஒடிசா நகரில் விண்கல் ஒன்று வீழ்ந்தது.

★1932-சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலினின் இரண்டாவது மனைவி தனது வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

★1941-இரண்டாம் உலகப் போர்:- மேற்கு அவுஸ்திரேலியாவில் HMAS சிட்னி மற்றும் HSK கோர்மோரன் என்ற போர்க்கப்பல்களுக்கிடையில் நிகழ்ந்த மோதலில் இரண்டும் மூழ்கின. இதில் 645 அவுஸ்திரேலியக் கடற்படையினரும் 77 நாசி ஜேர்மனியக் கடற்படையினரும் உயிரிழந்தனர்.

★1946-ஆப்கானிஸ்தான், ஐஸ்லாந்து, சுவீடன் ஆகியன ஐ.நாவில் இணைந்தன.

★1969-அப்போலோ 12 விண்கலத்தில் சென்ற சார்ள்ஸ் கொன்ராட், அலன்பீன் ஆகியோர் சந்திரனில் இறங்கி நடந்த மூன்றாவது, நான்காவது மனிதர்கள் என்ற பெயரினைப் பெற்றனர்.

★1969-பிரேசில் உதைபந்தாட்ட வீரர் பெலே தனது ஆயிரமாவது கோலைப் பெற்றார்.

★1977-எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் அமைதிப் பேச்சுக்களுக்காக இஸ்ரேல் சென்றடைந்தார். இஸ்ரேல் சென்ற முதல் அரபுத் தலைவர் இவரே.

★1977-போர்த்துக்கல் போயிங் விமானம் ஒன்று மெடெய்ரா என்ற இடத்தில் விபத்துக்குள்ளாகியதில் 130 பேர் உயிரிழந்தனர்.

★1985-பனிப்போர்: அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரொனால்ட் ரேகன், சோவியத் முன்னாள் ஜனாதிபதி மிக்கைல் கொர்பச் சோவ் இருவரும் ஜெனீவாவில் முதன் முறையாகச் சந்தித்தனர்.

★1999-மக்கள் சீனக் குடியரசு தனது முதலாவது சென்ஷோ விண்கலத்தை ஏவியது.

★2005-மகிந்த ராஜபக்ஷ, இலங்கையின் 5ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

**பிறப்புக்கள்**

★1831-ஜேம்ஸ் கார்ஃபீல்ட், ஐக்கிய அமெரிக்காவின் 20ஆவது குடியரசுத் தலைவர். (இ.1881)

★1835- ராணி லட்சுமிபாய், இந்திய ராணி. (இ.1858)

★1909- பீட்டர் டிரக்கர், ஆஸ்திரிய மேலாண்மை அறிவியலாளர் (இ.2005)

1917- இந்திராகாந்தி, இந்தியப் பிரதமர் (இ.1984)

**இறப்புக்கள்**

★1998- டெட்சுயா ஃபுஜித்தா, ஜப்பானிய வானிலை அறிஞர் (பி.1920)

★2008- எம்.என்.நம்பியார், நடிகர் (பி.1919)

**எம்.என். நம்பியார்**



மாஞ்சேரி நாராயணன் நம்பியார் அல்லது சுருக்கமாக எம்.என். நம்பியார் என்றழைக்கப்படும் இவர் தமிழ்த் திரையுலகில் ஒரு பழம் பெரும் நடிகர் ஆவார். கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்கும் மேல் தமிழ்த் திரையுலகின் தலைசிறந்த நடிகர்களுள் ஒருவராகத் திகழ்ந் தார்.

**வாழ்க்கைச் சுருக்கம்**

கேரள மாநிலத்தில் அமைந்துள்ள பெருவமூர் என்ற ஊரில் கேளு நம்பியார் என்பவருக்கு கடைசிக் குழந்தையாக பிறந்தார் நம்பியார். இவருக்கு ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் உள்ளனர். நம்பியாரின் எட்டாவது வயதில் தந்தை இறந்து விட்டார். இவர் 1946 ஆம் ஆண்டில் தனது உறவினரான ருக்மணி என்பவரைத் திருமணம் புரிந்தார்.

**மறைவு**

உடல் நலக் குறைவால் சென்னை தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவரது உயிர் 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி நண்பகல் 12.30 மணியளவில் பிரிந்தது.

# தப்பியோடிய கைதிகள் கைது செய்யப்படவில்லை

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலின் போது தப்பியோடிய சிறைக் கைதிகளில் நால்வர் இதுவரை கைது செய்யப்படவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

இவர்கள் தொடர்பான அனைத்து விபரங்களும் சிறைச்சாலைகள் திணைக்களத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தப்பியோடிய இந்நான்கு கைதிகள் தொடர்பான விபரங்கள் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற வெலிக்கடை சிறைச்சாலை மோதலின்போது ஐந்திற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பிச் சென்றதாக முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் தப்பிச் சென்ற கைதிகள் தொடர்பான விபரங்களில் முரண்பாடான கருத்துக்களே நிலவுகின்றது. இந்நிலையில் கடந்த 13 ஆம் திகதி தப்பிச் சென்ற கைதிகளில் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். (ந-2)

# விஷவாயு கசிவுக்கு விஷமசெயல் காரணமா?

## விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றது- சுசில்

(கொழும்பு)

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் விஷமசெயல் காரணமாக விஷவாயு கசிவு ஏற்பட்டதா என்பது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பெற்றோலிய தொழிற்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நேற்றைய தினம் ஆற்றிய போதே அமைச்சர் இந்த விடயத்தை கூறினார். அவர் இது தொடர்பாக கூறுகையில்,

இந்த விசாரணைகளுக்காக விசேட குழுவொன்றை நியமிக்கவுள்ளதாகவும் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்டிருந்த வாயுக்கசிவு நேற்று முன்தினமிரவு 8 மணியளவில் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இந்த சம்பவம் குறித்து விசாரணைகள் நிறைவடைந்ததும் பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க எண்ணியுள்ளதாக அவர் கூறினார். (ந-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரவு செலவுத்திட்டம் 2013
# ஒரே பார்வையில்

09

23.5. கௌரவ சபாநாயகர் அவர்களே, தெங்கு பயிர்செய்கை மற்றும் அதனோடு தொடர்பான கைத்தொழில்களின் ஆர்வம் கடந்த வருடங்களில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. அரசாங்கம் 2016 இல் 3 ஆயிரத்து 650 மில்லியன் தேங்காய்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்கனவே திட்டமிட்டுள்ளது. கப்புருக்க முன்னெடுப்பானது தரமான விதைப் பண்ணைகளை அதிகரிப்பதற்கும் அதேபோன்று பயிர்ச் செய்கையினை ஊக்குவிப்பதற்கு சிறிய பற்றுநில உடைமையாளர்களுக்கு மத்தியில் 10 மில்லியன் நாற்றுக்களை பகிர்ந்தளிப்பதற்கும் பங்களிப்புச் செய்துள்ளது.

5 ஏக்கர் காணிகளைக் கொண்ட அனைத்து பயிர்ச்செய்கையாளர்களுக்கும்தென்னை நாற்றுக்களை இலவசமாகப் பகிர்ந்தளிப்பதற்கு அரசாங்கம் தற்பொழுது தீர்மானித்துள்ளது. தெங்கு செய்கையில் சேதன பசளையின் பயன்பாட்டினை பிரபல்யப்படுத்துவதற்காக தெங்கு அபிவிருத்திக்கான செஸ் வரியிலிருந்து ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். அண்மையில் ஏற்பட்ட வரட்சியிலிருந்து நிவாரணம் பெறும் நடவடிக்கையொன்றாக அவ்வாறு பாதிக்கப்பட்ட அனைத்து மரங்களையும் அரசாங்கத்தினால் இலவசமாக மாற்றீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். தேங்காய் எண்ணெய் கைத்தொழிலினை மேம்படுத்துவதற்காக மரக்கறி எண்ணெய் இறக்குமதிகள் அனைத்தின் மீதும் உயர்ந்த வரியினை விதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். தெங்கு பயிர்ச்செய்கைக்கு சமாந்தரமாக சப்ரகமுக மாகாணத்தில் கித்துள் பயிர்சசெய்கைக்கும் வடமாகாணத்தில் பனை வளர்ப்புக்கும் அதிகளவான உணவு தயாரிப்பு மற்றும் கைத்தொழில் உற்பத்திகளுக்காக, இந்த சேதன மூலப் பொருட்களின் கிடைப்பனவினை அதிகரிப்பதனை உறுதிப்படுத்துவதற்காக ஊக்கமளிக்கப்படும். தனித்துவமான இயற்கை தன்மை கொண்ட கறுவாவினை இலங்கை கொண்டுள்ளது என்ற வகையிலும் இலங்கையின் கறுவாவிற்கான விற்பனை பெறுமதி அழிந்து போவதற்கு எம்மால் அனுமதிக்க முடியாது என்ற வகையில் அரசாங்கம் சர்வதேச சந்தையில் தேசிய அடையாளத்தினை பாதுகாப்பதற்கான நடவடிக்கையினை ஏற்கனவே எடுத்துள்ளது.

24. சிறு தொழில்முயற்சி பொருளாதாரம்.

24.1. கௌரவ சபாநாயகர் அவர்களே, சிறு தொழில் முயற்சிகளின் ஊழியர்கள் மொத்த ஊழியர் படையில் 35 சதவீதம் என்பதுடன் தேசிய பொருளாதாரத்தில் 25 சதவீதமாகவும் காணப்படுகின்றனர். எவ்வாறாயினும் இத்துறையின் செயலாற்றுகையானது அதிக ஒழுங்குபடுத்தல் முறைமைகள் மற்றும் செயன்முறைகள் அத்துடன் அரசாங்கத்தினாலும் அதேபோன்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களினால் விதிக்கப்படுகின்ற வரிகளினாலும் அறவீடுகளினாலும் பாதிக்கப்பட்டுள்ளது. வரவு செலவுத்திட்ட மதியுரை கூட்டங்களில் இத்துறையின் ஒவ்வொரு பகுதியினதும் குழுக்களுடன் கலந்துரையாடிய போது அரசாங்க நிறுவனங்களுடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இலகுபடுத்தப்பட்ட முறைமைகளும் நடவடிக்கை முறைகளும் தேவையென்பது வலியுறுத்தப்பட்டது. எனது முன்னைய வரவு செலவுத் திட்டத்தில் பற்றுவரி, பொருளாதார சேவைக் கட்டண நீக்கம் மற்றும் தேசக் கட்டுமான வரி மற்றும் மாகாண புரள்வு வரி என்பன ஒன்று சேர்க்கப்பட்டமை சிறிய வியாபாரங்களுக்கு நியாயமானளவு நிவாரணத்தை வழங்கியுள்ளது.

அவர்கள் முழுமையான வரி நிவாரண சூழலில் தொழிற்பட முடியுமான வகையில் தேசக் கட்டுமான வரி மற்றும் பெறுமதி சேர் வரி என்பவற்றிலிருந்து அத்தகைய வியாபாரங்களும் விலக்களிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் 10 சதவீத குறைந்த வரிவீதத்தின் மூலம் நன்மையடைவதற்கு அனுமதிப்பதற்காக ஏற்புடையதான வருடாந்த புரள்வினை ரூபா 500 மில்லியனாக உயர்த்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

24.2. பதனிடப்பட்ட வாசனைத் திரவியங்கள், மெழுகுவர்த்தி மற்றும் ஊதுபத்திகள், கருவாடு, பதனிடப்பட்ட உணவு மற்றும் குடிபானங்கள், இனிப்புப் பண்டங்கள் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளில் ஈடுபட்டுள்ள சிறிய தொழில்முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக சுங்க நிலையில் வெளியீடு மற்றும் உள்ளீடுகளுக்கிடையில் வித்தியாசமான வரியினை விதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். சிறந்த உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்கும் சுற்றுலாப் பிரயாணிகளினால் விரும்பப்படுகின்ற விசேடமான பரிசுப்பொருட்களை தயாரித்து கவர்ச்சிகரமான சந்தை வாய்ப்பினையும் உருவாக்குவதற்கு களிமண் உற்பத்தி கைத்தொழிலுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகின்றேன். தேவையான மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு இயலுமான வகையில் இலகுப்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

சிறிய வியாபாரங்கள், புத்தாக்கங்கள் மற்றும் அர்ப்பணிப்புகள் தவிர்ந்த மரபு ரீதியான வங்கிகளுக்குரிய ஆதாரங்களை கொண்டிருப்பதில்லை என்ற வகையில் கடன் பெறுவதற்கு போதிய வசதிகளை அவை பெற்றிருப்பதில்லை. எனவே, சமுர்த்தி வங்கி சங்கங்களின் மூலம் ரூபா 500 ஆயிரம் வரையான குத்தகை வசதிகள் உள்ளடங்கலான சிறு நிதித்துறையினை விரிவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். சிறிய தொழில் முயற்சி சுய உத்தரவாதங்களின் அடிப்படையில் கடன் வசதிகளை வழங்குவதற்கு, பிராந்திய அபிவிருத்தி வங்கிகளை பயன்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். சிறிய வியாபாரங்களுக்கு கடன் வழங்கலை ஊக்குவிப்பதற்காக சிறிய நிதித் துறை மற்றும் ஏனைய வங்கித் தொழில் நிறுவனங்களின் கடன் ஆபத்துக்களை பதிவளிப்புச் செய்வதற்கு, கடன் உத்தரவாதத் திட்டமொன்றினை செயற்படுத்துவதற்கு லங்கா புத்திர அபிவிருத்தி வங்கிக்கு ரூபா 500 மில்லியன் பெறுமதியான முறி ஒன்றினை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். தொழில் முயற்சி அபிவிருத்திக்காக திவிநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2013 இல் மனைப்பொருளாதாரங்களிலிருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் 25 பெண் சிறுதொழில் முயற்சியாளர்களை மேம்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

முதலீட்டு நிதிக் கணக்குகளில் உள்ள நிதியினை பயன்படுத்தி அனைத்து மாவட்டங்களிலும் அத்தகைய தொழில் முயற்சிகளுக்காக ரூபா 10 மில்லியன் வரை தொழில் முயற்சி முதலீட்டு நிதியாக வழங்குவதற்கு அனைத்து வங்கிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன்.



24.4 சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் பிம்சவிய நிகழ்ச்சித் திட்டம் என்பன சட்ட ரீதியான பிணக்குகள் மற்றும் காணி நிர்ணயம் தொடர்பான பிரச்சினைகளுக்கு கடந்த வருடங்களின் போது தீர்வு வழங்குவதற்காக சிறிய பொருளாதாரங்களுக்கு உதவி வழங்குகின்றேன. இந்த சேவைகளை மேலும் துரிதப்படுத்துவதற்காக முதலீடுகளையும் வேலை வாய்ப்புகளையும் உருவாக்குவதற்கு சிறு வியாபாரங்களை ஊக்குவிப்பதற்கான விசேட நிகழ்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு 2013 இல் மேலும் 500 மில்லியன் ரூபாவினால் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

25.ஏற்றுமதிக் கைத்தொழில்

25.1. கௌரவ சபாநாயகர் அவர்களே, கைத்தறி மற்றும் அதனையொத்த உள்நாட்டு வளங்களை அடிப்படையாகக் கொண்ட பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் சர்வதேச சந்தையில் நியாயமானளவு வளர்ச்சியினை பெற்றுள்ளன. இந்த உற்பத்திகள் சர்வதேச பாதுகாப்பு தேவைப்பாடுகளுடன் இணங்கி பொருமுக வேண்டுமென்ற தேவையுள்ளது என்ற வகையில் சர்வதேச சந்தைகளில் அவற்றினது போட்டித்தன்மையினை மேம்படுத்துவதற்காக உற்பத்தி பாதுகாப்பு பரிசோதனைக்கான உண்மையான செலவீனத்தினை கோருவதற்கு, அத்தகைய கைத்தொழில்களை அனுமதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

ஆடை மற்றும் ஏனைய தயாரிப்புக் கைத் தொழில்கள் அவற்றினது கைத்தொழில்களை உயர் தொழில்நுட்பத்தினை அடிப் படையாகக் கொண்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுடன் நவீனமயப்படுத்துவதற்கும் அவற்றினது சர்வதேச அந்தஸ்தினை பேணுவதற்கும் அவற்றுக்கு இரண்டு வருட பெறுமதி தேய்வு கொடுப்பன விற்காக நான் முன்மொழிகின்றேன். மேலும் ஆடைக் கைத்தொழில் துறையின் ஆற்றலினை மேம்படுத்துவதற்காக தினமும் பயன்படுத்தப்படும் நுகர்வுபொருட்களின் மீது அறவிடப்படும் துறைமுக மற்றும் விமான நிலைய அறவீட்டினை 5 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதமாக குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

25.2. எமது இலக்கானது ஏற்றுமதி உற்பத்திகளை பன்முகப்படுத்துவது மாத்திரமல்லாமல் சந்தைகளையும் பன்முகப் படுத்த வேண்டும் என்ற வகையில் இலங்கையிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாயப் பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட ஏற்றுமதிகளை வளர்ந்து வரும் நாடுகள் கொண்டுள்ளன என்ற வகையில் அவற்றுடன் எமது அரசாங்கம் செயற்படுகின்றது. இந்த நடவடிக்கைகள் இக்கைத்தொழில்களின் ஆற்றலினை மேம்படுத்துவதுடன் அவற்றை ஆடைக் கைத்தொழில் துறை 5 ஆயிரம் மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை பெறுகின்ற அதேவேளை பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திகள், ஆபரணம், மட்பாண்டங்கள், இயந்திரம், இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் வளர்ச்சியினை அதிகரிக்கச் செய்யுமென நான் நம்புகின்றேன்.

26. உள்ளூராட்சி மன்றங்கள்

26.1. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது நாடு 335 பிரதேச சபைகளை கொண்டிருக்கின்றது. இது 12 மாநகர சபைகளையும் உள்ளடக்கியுள்ளது. இவை அனைத்திலுமிருந்தான வருமான வருடமொன்றிற்கு ரூபா 100 மில்லியனுக்கு அதிகமாகும். 53 நகர சபைகளினதும் வருமானம் ரூபா 25 மில்லியனிருந்து ரூபா 100 மில்லியன் வரையான வீச்சில் காணப்படுகின்றது.

இந்த நகர மற்றும் மாநகர சபைகள் சமூகத்திற்கு சேவை வழங்கவேண்டிய அவற்றினது கடப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு போதிய வருமானத்தினை நியாயமானளவு கொண்டிருக்கின்றது. இந்த சபைகளுக்கு சொந்தமான பல வர்த்தக சொத்துக்கள் முறையாகப் பன் படுத்தப்படுவதில்லை.


பல்வகைப்பட்ட வரி விதிப்பனவு தொழிற்பாடுகள் மற்றும் கட்டண அறவீட்டு நடவடிக்கைகள் என்பன சமூகத்திற்கு கட்டத்தினை ஏற்படுத்தியுள்ளன. முறைமைகள் மிகவும் சிக்கலானவையாக இருப்பதுடன் ஒழுங்கீனங்களை ஊக்குவிக்கின்றன. எனவே ஆதனங்களின் விலைமதிப்பீட்டில் சிக்கல்களைப் போக்கி ஆதன வரிகளுக்கான விலை மதிப்பீடுகளை ஒரு சீராக உருவாக்குவதற்கும் தொடர்புடைய உரிமக் கட்டணங்களைஇற்றைப்படுத்துவதன்ஏனைய அறவீடுகளையும் ஒழுங்குபடுத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கையெடுக்குமென நான் நம்புகின்றேன். மேலும் நேர விரயத்தினை ஏற்படுத்தும் நடைமுறைகளை குறைப்பதற்காக உரிய உள்ளூராட்சி அதிகார சபைகள் தொடர்பான முத்திரை தீர்வைகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நேரடியாக சேகரித்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் முடிபல்ல; அது புதிய அத்தியாயத்தின் ஆரம்பம்

## பாராளுமன்றில் சிறிதரன் எம்.பி. பேச்சு



முள்ளியவாய்க்கால் ஒரு முடிபல்ல. அது ஒரு புதிய அத்தியாயத்தின் ஆரம்பமாகும். ஆயுதப் போராட்டம் சரியா தவறா என்பதில் இருந்து இங்கு அரசியல் தொடங்கப்படத் தேவையில்லை.

மாறாக தமிழ் மக்களின் மறுக்கப்பட முடியாத உரிமைகளை ஏற்றுக் கொள்வதிலிருந்தே அரசியல் தொடர்பு தொடங்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட 2ஆம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

முள்ளிவாய்க்கால் படுகொலைகள் நிறைவடைந்து மூன்றரை வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இன்று இது வானத்தில் துப்பிய, எச்சிலாய் முகத்தில் வீழ்ந்து கொண்டிருக்கின்றது.

வானத்தை நோக்கி துப்பினால் அது உன் முகத்தில் வந்து விழும் என்று புத்த பெருமான் கூறியிருக்கிறார்.

அந்தவகையில் தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட அனைத்து செயற்பாடுகளும் இப்போது புத்த பெருமான் கூறியதைப் போன்றே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

தமிழரின் வியர்வையால் வளப்படுத்தப்பட்ட இலங்கை இன்று அதே தமிழரின் இரத்தத்தால் இலங்கைத் தீவு கறை படிந்ததாகி விட்டது.

தமிழ் மக்களுக்கான உரிமைகள் என்னவென்பதை அறிந்து அதனை ஏற்றுக் கொண்டு ஒரு வளமானதும் ஐக்கியமானதுமான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு சிங்களத் தலைவர்கள் தவறிவிட்டனர்.

மாறாக தமிழரைக் கொன்று குவிப்பதையும் உரிமைகளை மறுப்பதையும் தமது தலையாயக் கடமையென பின்பற்றி வருகின்றன.

நவீன நிலைமைக்குப் பொருத்தமான ஐக்கிய இலங்கையை பல்லினத் தன்மையோடு கட்டியெழுப்புவதற்கு தமிழ்த் தலைவர்கள் விரும்புகின்ற நிலையில் சிங்களத் தலைவர்கள் ஓர் இன மேலாதிக்கத்தை அரசியல் இலட்சியமாக கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

ஆயுதப் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கிய மகிழ்ச்சியில் சிங்களத் தலைவர்கள் வெடி கொளுத்தி மகிழ முடியும். ஆனால் தமிழ் மக்களின் உரிமைகள் வெடி குண்டுகளால் தகர்க்கப்படக் கூடியவை அல்ல. அரசாங்கம் கூறுவதைப் போல் பயங்கரவாதம் ஒரு பிரச்சினை அல்ல. ஆனால் ஏற்றுக் கொள்ளப்படாது ஒடுக்கப்படுகின்ற தமிழர் உரிமையே இங்கு பிரச்சினை ஆகும்.

படுகொலை செய்யப்பட்ட தமிழரைப் பாதுகாப்பதற்கு ஐ.நா. செயற்பட்டிருக்கவில்லை என்ற குற்றத்தை ஒப்புக் கொண்டிருக்கின்றது.

ஐ.நா. அறிக்கையின்படி 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கூறியுள்ள அதேவேளை ஒரு இலட்சத்து 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருக்கலாம் என மன்னார் ஆயர் அதிவண இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்திருக்கிறார்.

எப்படியிருப்பினும் உண்மைத் தன்மையானது தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளது. படுகொலை செய்யப்பட்ட தமிழருக்காக துளியேனும் இரங்காத பெரும்பான்மை இனத்தவர்களுடன் எவ்வாறு ஐக்கியப்பட்டு வாழ முடியும் என்பதை இன்று ஒவ்வொரு தமிழனும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றான்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆயுதங்களின் மேல் காதல் கொண்டவர்கள் அல்லர். மாறாக உரிமை மறுக்கப்பட்டதால் தவிர்க்க முடியாத வெளிப்பாடே இது ஆகும் எனக் கூறி தன் கருத்தை முடித்துக் கொண்டார். (ந - 2)

# பூநகரிப் பகுதியில் காட்டு வளம் அழிக்கப்படுகிறது

## தடுத்து உதவுமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை



(மல்லாவி)

பூநகரியில் வடபுலமான நல்லூர், ஆலங்கேணி, பரமன்கிராய், ஞானிமடம், கறுக்காய் தீவு ஆகிய இடங்களில் இருந்து நீர்வரட்சி காரணமாகவும் மண் உவர்த் தன்மை அடைந்து வருவதாலும் மக்கள் பூநகரியின் தென்புலம் நோக்கி நிரந்தரமாக இடம்பெயர்கின்றனர்.

இதற்கு காரணம் இப்பகுதியின் காட்டு வளம் அழிக்கப்படுவதும் மணல் மண் அகழப்படுவதும் என சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

காடு அழிப்பானது முட்கொம்பன், ஜெயபுரம், நாகபடுவான், பல்லவராஜன் கட்டு, முழங்காவில் ஆகிய பகுதிகளில் அதிகமாக இடம்பெறுகின்றது.

குடியிருப்பு அமைப்பதற்கும் விறகுத் தேவைக்காகவும் தளபாட உற்பத்திக்கும் பயன் தரு பெரிய மரங்கள் வெட்டி வீழ்த்தப்படுகின்றது. இவற்றை விட கரையோர மணல் அகழ்வுகள் சட்டவிரோதமாக நடைபெறுகிறது.

குறிப்பாக வினாசியோடை, கௌதாரி முனை ஆகிய இடங்களில் கனியவள அமைச்சில் அனுமதியில்லாமலும் சரியான திட்டமிடல் இல்லாதும் மணல் அகழப்படுகின்றது.

இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் சமூக அக்கறை கொண்ட அமைப்புக்களால் பூநகரி வடபுலத்தில் காணப்படும் கடல் நீர்த் தடுப்பு அணைகளை புனரமைத்தல், காடுகள் அழிப்பதைக் கட்டுப்படுத்தல், வரட்சியை போக்குவதற்கு நீர்வளத்தை மேம்படுத்த அக்கராஜன் ஆறு, மண்டக்கல் ஆகியவற்றில் புதிய தடுப்பு அணைகளை அமைப்பதன் ஊடாக நீர்த் தேக்கம் செய்தல், சிறிய குளங்களை புனரமைப்புச் செய்தல் போன்ற நடவடிக்கைகளுடன் காடு வளர்ப்புத் திட்டத்தை மக்களின் விழிப்புணர்வுடன் செயற்படுத்தல், ஆறுகளில் இருந்து சட்டவிரோதமாக மணல் அகழ்வைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

குறிப்பாக கௌதாரிமுனை, வினாசியோடைப் பகுதிகளில் மணல் அகழ்வு தடுக்கப்பட வேண்டியது அவசியம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ந - 3 - 15)

## ஆசிரிய ஆலோசகர்களுக்கு பயிற்சிச் செயலமர்வு

(மல்லாவி)

தேசிய கல்வி நிறுவகத்தினால் வடக்கு மாகாணக் கல்வி வலயங்களில் உள்ள செயன்முறைத் திறன்களும் தொழில்நுட்பத் திறன்களுக்குமான பாட ஆசிரிய ஆலோசகர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு எதிர்வரும் 23, 24ஆம் திகதிகளில் காலை 8.15 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை மகரகமவில் உள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் அறை - 02 இல் நடைபெறவுள்ளதாக செயன்முறைத் திறன்களும் தொழில் நுட்பத் திறன்களுக்குமான பாட செயற்றிட்ட அதிகாரி கே.எம்.ஜீ.என்.ரீ.டயஸ் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வில் கலந்து கொள்ளவுள்ளோர் தங்குமிட வசதி தேவையாயின் எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு முன் நிறுவகத்தின் விடுதிப் பரிபாலகரைத் தொடர்பு கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 0718246397, 0117601601 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந - 3 - 15)




ஈ.சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா யாழ்ப்பாணம் மூர்த்தி விருந்தினர் விடுதியில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஈ.சிற்றி ஆங்கில கல்லூரியின் தலைவர் லயன்.ஜெ.றஜீவன் தலைமையுரையாற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் மாணவி ஒருவருக்கு பதக்கம் அணிவிப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிப் பள்ளத்தில் வீழ்ந்து குடும்பஸ்தர் பரிதாப மரணம்

## கே.கே.எஸ் வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் வெட்டப்பட்டிருந்த பள்ளத்தினுள் தவறி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் பரிதா பமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் கே.கே.எஸ். வீதியில் (நாச்சி மார் கோவிலுக்கு அருகாமையில்) இடம் பெற்றுள்ளது.

துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்தபோது வீதியில் அமைக்கப் பட்டு வரும் மதகின் பள்ளத்தினுள் தவறி வீழ்ந்ததனால் மதகு அமைப்பதற்காக போடப்பட்டிருந்த இரும்புக் கம்பியில் தலை அடிபட்டு படுகாயமடைந்த நிலையில் குறித்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார் என யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.உதயசிறி' தெரி வித்தார்.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர் யாழ்ப் பாணம் அச்சுக் கூட வீதியைச் சேர்ந்த நட ராஜா பத்மநாதன் (வயது 55) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

இவரது சடலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டதோடு பிரேத பரிசோதனையின் பின்பு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவரது மரணம் தொடர்பாக யாழ்ப்பா ணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பாதுகாப்பற்ற முறையில் குறித்த மதகு அமைக்கும் பணி இடம் பெற்று வந்ததாக உயிரிழந்தவரின் உறவினர்கள் குற்றம் சாட்டியதோடு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராகவும் ஒப்பந்தகார ருக்கு எதிராகவும் சட்ட நடவடி க்கை எடுக்க வேண்டும் என திடீர் மரண விசாரணை அதிகாரியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

உறவினர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக இன்று யாழ்.நீதவான் நீதிமன் றில் திடீர் மரண விசாரணை அதிகாரியினால் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

வீதியில் மதகு அமைக்கப்பட்டு வருகிறது என்பது தொடர்பில் பிரயாணிகளுக்கு அபாய விளக்குகளை ஒளிர விட்டு எச்சரிக்கை செய் யத் தவறிய வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அதன் ஒப்பந்தக்காரருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதை திடீர் மரண விசாரணை அதிகாரி உறுதிப்படுத்தியி ருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




பருத்தித்துறை வீதியில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள மதகின் மேல்வாய் திறந்த நிலையில் பாதுகாப்பற்று இருப்பதனை படத்தில் காணலாம்.

இதேவேளை குடாநாட்டில் வீதித் திருத்தப் பணிகள் மற்றும் வீதிகளின் ஓரமாக அமைக்கப் பட்டு வரும் வடிகான்கள் என்பன எந்த விதப் பாதுகாப்பும் அற்ற நிலையில் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந - 6)

## காரிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு பம்பலப்பிட்டி மெராயன் டிரைவ் வீதியில் அநாதரவாக நின்ற காரொன்றில் இருந்து ஆணொருவரின் சடலம் நேற்று பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலத்தில் வெட்டுக்காயங்கள் இருந்ததாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரி விக்கின்றனர்.

அந்த சடலம் குறித்த விசாரணைகளை மேற்கொள்ள இரண்டு பொலிஸ் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு காரில் மீட்கப்பட்ட சடலம் கிரு லப்பனை பகுதியைச் சேர்ந்த 50 வயதான ஒருவருடையது என அடையாளம் காணப் பட்டுள்ளது. இந்தநிலையில் சடலம் தொடர் பில் மேலதிக பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ந-2)

## கடனட்டை மோசடியில் ஈடுபட்ட ஐவர் கைது

பாரியளவில் கடனட்டை மோசடியில் ஈடு பட்ட ர்ஷ்ய பிரஜைகள் ஐவர் வெள்ளவத் தையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

250 போலி கடனட்டைகளுடன் இவர்கள் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச் சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

கைது செய்யும் போது இவர்களிடம் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அமெரிக்க டொலர் கள் இருந்துள்ளன. இவர்கள் நாளொன் றிற்கு நாட்டிலுள்ள கடனட்டை இயந்திரங்கள் மூலமாக 2.1 மில்லியனை பெற்றுள்ளனர்.

கடனட்டை மோசடியில் ஈடுபடுவதற்காக பயன்படுத்தப்பட்ட மடிக்கணனிகள் பொலி ஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக் கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. (2)

# சிறைச்சாலைகளை நவீனமயப்படுத்த பலகோடி ரூபா நிதி ஒதுக்கீடு!

## அவசர தேவை இது என்கிறார் கஜதீர

(கொழும்பு)

சிறைச்சாலைகளுக்குத் தேவைப்படும் உயர் தொழில்நுட்ப சாதனங்களை கொள் வனவு செய்ய 18 கோடி 80 இலட்சம் ரூபா நிதி புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு நிதியொதுக்கி யுள்ளது.

அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் பணிப் பையடுத்து அவசரத் தேவை ஒன்றாகக் கவனத்தில் கொண்டு இந்த நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

இதனடிப்படையில் சோதனையிடும் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் கைவி லங்குகள் , சங்கிலிகள், தலைக்கவசங்கள், குறுந்தடிகள் என்பன கொள்வனவு செய்யப் படவுள்ளன.

இதற்காக 18 கோடி 80 இலட்சம் ரூபா நிதி புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சால் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளுக்குள் வரும் சிறைக் கைதிகள், உத்தியோகத்தர்கள் போன்றோ ரின் பொதிகளை சோதனை செய்யும் ஸ்கான் கருவிகள், மெற்றல் டிடெக்ரர், ஜாமர் இயந் திரங்கள் உள்ளிட்ட உயர்தொழில்நுட்ப உப கரணங்களை விரைந்து கொள்வனவு செய் யுமாறு அமைச்சரால் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு பணிக்கப்பட் டுள்ளது.

அண்மையில் வெலிக்கடை சிறைச்சா லையில் ஏற்பட்ட மோதலின் போது பாதிப் படைந்த பாதுகாப்பு உபகரணங்களுக்கு மாற்றீடாகவே இவை கொள்வனவு செய்யப் படவுள்ளதாக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ந-2)

# துப்பாக்கி முனையில் பெருமளவான தங்க நகைகள் கொள்ளை

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு கல்லடி பிரதேசத்தில் உள்ள வீட்டில் நேற்று முன்தினம் இரவு புகுந்த ஆயுததாரிகள் துப்பாக்கி முனையில் பெருமளவான தங்க நகைகளை கொள் ளையிட்டுச் சென்றுள்ளனர்.

கல்லடி திருச்செந்தூர் முதலாம் குறுக் கில் உள்ள வீட்டிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைத்துப்பாக்கியை காட்டி வீட்டில் இரு ந்த சுமார் 12இலட்சம் ரூபா பெறுமதியுடைய 26பவுண் தங்க நகைகளையே இவ்வாறு கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந - 8)


## குப்பைத் தொட்டியிலிருந்து துப்பாக்கி ரவைகள் மீட்பு

கண்டி மாவட்ட செயலகம் முன்பாகவுள்ள குப்பைத் தொட்டிக்குள் ரி-56 ரக துப்பாக்கிக்கான 30 ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம்குறித்தஇடத்தில் இருந்த சந்தேகத்திற்கிடமான உரப்பையொனறை அவதானித்த இராணுவச் சிப்பாய் ஒருவர் அதனைச்சோதனைக்குட்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து அவற்றிற்குள் துப்பாக்கி ரவைகள் இருப்பதைக்கண்டு உடனடியாக கண்டி பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் துப்பாக்கிரவைகளை மீட்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2)







ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையி லான இராஜதந்திர உறவின் 60 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு ஜப்பான் நாட்டின் தூதரகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இசை நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதுவர் நொபுஹிதோ ஹொபோ உரை யாற்றுவதையும் இசை நிகழ்ச்சி இடம்பெறு வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்க ளையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம், குலம், கல்வி...
பசி வந்திடப் பத்தும் பறந்திடும்.
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வயிற்றுக்கு உணவில்லாதபோது (தமிழ்) உணர்வுக்கு இடம் ஏது?

தமிழ்ப் பெண்கள் இராணுவத்தில் சேர்க்கப்பட்டனர் என்ற செய்தி ஆச்சரியத்திற்குரியதுதான்.

தமிழர்கள் என்றால் அவர்களை பொலிஸில், இராணுவத்தில் இணைக்கக் கூடாது என்பது அரசின் இறுக்கமான கொள்கையாக இருந்தது.

அதேநேரம் இராணுவத்தில், பொலிஸில் இடம் பெற்றிருந்த தமிழர்கள் தொடர்பில் விடுதலைப் புலிகள் கடும் கோபம் கொண்டிருந்தனர்.

இதன் காரணமாக படைச் சேவையில் இருந்து இடைவிலகிய–ஓய்வுபெற்ற தமிழர்கள் பலர் இருக்கின்றார்கள்.

எனினும் இத்தகையவர்கள் தங்கள் சொந்த ஊருக்கு வரமுடியாதவர்களாக, அவ்வாறு வந்தால் திரும்பிச் செல்ல முடியாதவர்களாக இருந்தனர் என்ற உண்மையையும் மறுப்பதற்கில்லை.

இவ்வாறு ஒருபுறத்தில் தமிழர்களை படையில் இணைத்துக் கொள்ள அரசு மறுத்த நிலையும்,

ஏற்கெனவே படையில் இணைந்துகொண்ட தமிழர்களை துரோகம் இழைப்பவர்களாக புலிகளும் கருதிக்கொண்ட காலமும் மலையேறி, இப்போது தமிழ்ப் பெண்களை இராணுவத்தில் இணைத்துக் கொள்ள அரசு முன்வந்துள்ளது.

அதேநேரம் விடுதலைப் போராட்டத்தின் கோட்டையாக இருந்த வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண் பிள்ளைகள் எந்தவித பின்னடிப்புகளும் இன்றி இராணுவத்தில் இணைந்துள்ளனர்.

இப்போது தமிழ்ப் பெண்களை இணைத்துக் கொள்ளும் அரசு கால ஓட்டத்தில், தமிழ் இளைஞர்களையும் இராணுவத்தில் இணைத்துக்கொள்ளும்.

யுத்தத்திற்குப் பின்பான அரசின் இத்தகைய நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மீது கொண்ட பற்றின் காரணமாக ஏற்பட்டதல்ல.

தமிழ் இனம் – தமிழர் தாயகம் என்ற விடயங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாக இருந்தால் யுத்தத்தால் அழிந்துபோன தமிழ் மக்களின் வறுமையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலேயே அரசு தனது வியூகத்தை நகர்த்திச் செல்கின்றது.

தமிழர் பிரதேசத்தில் இருந்து இராணுவ முகாம்களை அகற்றினால் விடுதலைப் புலிகள் மீண்டும் எழுகை பெறுவதற்கு வாய்ப்புண்டு எனக்கூறும் அரசு, இன்னொரு பக்கத்தில் தமிழ்ப் பெண்களை இராணுவத்தில் இணைத்துக் கொள்கிறது.

எங்கள் அரசியல் தலைமைகள் ஏதோ பேசிக் கொள்ள, வயிற்றுக்கு உணவின்றி வாடும் தமிழ்க் குடும்பங்கள் படையில் சேர்ந்தேனும் எங்கள் சீவியத்தைப் பார்த்துக் கொள்வோம் என்ற முடிபுக்கு வந்துவிட்டன.

இத்தகையதொரு முடிபை திட்டமிட்டு ஏற்படுத்திய அரசு அந்த முடிபை தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள சிறிது காலம் சென்ற பின் தமிழ்த் தேசியம் பற்றி யார் கதைத்தாலும் அவர்களை நோக்கி ஓங்கப்படும் கரங்கள் படைத்தரப்பில் இருக்கக் கூடிய தமிழர்களாகவே இருப்பர்.

என்ன செய்வது! எங்களின் நிலையை அறிந்து எங்கள் வாழ்வாதாரத்தை எப்படிக் கட்டியெழுப்புதல் என்பது பற்றிச் சிந்திக்காத தமிழ் அரசியல் தலைமைகள், எதிர்காலம் பற்றி சிந்திக்கவா போகின்றன!

## வாசிப்புமாத பரிசளிப்பு விழா

(வட்டக்கச்சி)

கரைச்சி பிரதேச சபை பொது நூலக தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வட்டக்கச்சி பொது நூலக மண்டபத்தில் பொதுநூலக வாசகர் வட்ட உபதலைவர் மு.குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரைச்சி பிரதேச சபைத்தவிசாளர் நா.வை. குகராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக ஆய்வு உத்தியோகத்தர் ப.விமலநாத சர்மா, கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி கு. தவசோதி, கரைச்சி பிரதேச சபை துணைத் தவிசாளர் வ. நகுலேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக வட்டக்கச்சி பிரதேச ஆயுர்வேத வைத்திய சாலை வைத்தியகலாநிதி ப.தவசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ந-3-86)

## நிர்மலனே உன் பொற்கமல பாதம் பணிந்தேன்



சூரபத்மன் குலமொழிக்கக்
சுவர் வேலை ஏந்தி நின்றாய்
சுந்தரன் நீ சுவை மிகுந்த
தமிழ் மொழியை எமக்கீந்தாய்
பாரதிலே பல கோடி அடியவருன்
அடி பணிவார் பல நூறு
பாக்களினால் பாமாலை
சூட்டி நிற்பார்
பேரருளை பொழிவதிலே
மாரிமழை ஆனவனே
பெரிதான உன் நோன்பாம்
கந்தசட்டித் திருநாளில்
நீரருவி போலெனது விழியினில்
நீர் ஓடிவர நிர்மலனே
உனை நினைந்துன்
பொற்கமல பாதம் பணிந்தேன்!

*சி.சிவபாலன்*
செல்வநகர், மன்னார்.

## தனியார் பேருந்து மீது கல்வீச்சு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பேருந்து மீது மிருசுவில் பகுதியில் வைத்து கல்லெறி வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் சாவகச்சேரி மிருசுவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோடு யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்திற்கும் தெரியப்படுத்தியுள்ளதாக இணையத்தின் தலைவர் தெரிவித்தார். (ந-6)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண்ம் உயர்தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் ஏரிஐ வார சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிறுவன பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இந்திய உயர்ஸ்தானி கராலய தூதுவர் வி. மகாலிங்கம், கௌரவ விருந்தினர்களாக இலங்கை தொழில் நுட்பவியல் நிறுவனப்பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் கே. கபிலா, சி. கே.பெரேரா, இந்திய துணைத்தூதுவரின் ஆலோசகர் சுரேஷ் கே. மேனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக பிரபல தொழிலதிபர் லயன், ஈ.எஸ்.பி நாகரத்தினம், நல்லூர் லயன்ஸ்கழகச் செயலாளர் லயன்.பி. பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-9)

## "சந்நிதி குகநாதா" இசைப்பேழை வெளியீடு

(வடமராட்சி)

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகப் பெருமானின் புகழ்பாடும் "சந்நிதி குகநாதா" எனும் இசைப்பேழை கடந்த 16ம் திகதி வெள்ளிக்கிழமை கந்த சஷ்டி தினத்தன்று வெளியிட்டு வைக்கப் பட்டது. இவ் இசைப்பேழையில் இடம் பெற்றுள்ள பாடல்களை பாரத கவிஞர் மதுரகவி மற்றும் ஈழக்கவிஞர் உமா சதீஸ் ஆகியோர் எழுதியுள்ளனர். தென்னிந்திய இசையமைப்பாளர் அக்கினி கணேசினால் இசையமைக்கப்பட்ட இவ்விசைப் பேழையில் இடம் பெற்றுள்ள பாடல்களை தென் இந்தியப் பாடகர்கள் உன்னி கிருஸ்ணன், ராகுல் பவன் மற்றும் அருணா ஆகியோர் பாடியுள்ளனர்.

இவ்விசைப்பேழை விற்பனை மூலம் பெற்றுக்கொள்ளப்படும் நிதி முழுவதும் சந்நிதிக் கந்தன் ஆலய வளர்ச்சிக்காக பயன்படுத்தப்படவுள்ளது. இவ் இசைப் பேழையை பெற்றுக்கொள்ள விரும்பும் அடியார்கள் ஆலய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என ஆலய நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். (ந21)

## "இணுவில் ஒலி" அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் திருவூரின் சிறப்பினை யாவருக்கும் தெரிவிக்கும் நறுமணப் பூங்காவான இணுவில் ஒலி சஞ்சிகையின் அறிமுகவிழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் அறிவாலய தலைவர் அ.குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இணுவில் ஒன்றியத்தின் லண்டன் உபதலைவர் க.விவேகானந்தன், சிறப்பு விருந்தினர்களாக இணுவில் ஒன்றியத்தின் லண்டன் செயலாளர் ச. சபேசன், பொருளாளர் வை. தனகேசவன், இணுவில் அண்ணா நிறுவனத்தின் பொ. நடராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்விற்கு ஆசியுரையினை இணுவில் கந்தசுவாமி கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக்குருக்கள் ஆற்றவுள்ளார்.

இந்நூலின் முதற்பிரதியை யாழ்ப்பாணம் பெஷன் ஹவுஸ் த. கந்தசுவாமி பெற்றுக்கொள்ளவுள்ளார். (ந-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## எண்ணத்தின் ஆற்றல்



ஒருவர் ஒரு திருவிழாவுக்குப் போகவேண்டுமென்று எண்ணுகிறார். அந்த எண்ணத்தில் ஒரு ஊர், அங்கு போகும் செயல், அங்கு காண விழையும் காட்சிகள் அனைத்தும் அக்காட்சிகள் ஆகின்றன. இவ்வாறு புறமனதில் ஒரு எண்ணம் உருவாகும் போது அதற்கு வேண்டிய அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் ஆகிய எழுச்சிகள் உயிராற்றலின் இயக்க அலைகள் மூலம் ஏற்படுகின்றன. உயிராற்றலை மூளையின் சிற்றறைகளில் எத்தனை கோடி இணைந்து அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் இவையாக மாற்றமுடியுமோ அத்தனையும் இணைந்து இயங்கியே ஒரு எண்ணத்தில் அக்காட்சி உருவாகின்றது. இவ்வாறு மூளையில் ஏற்படும் பதிவுகளும் பிரதிபலிப்புகளும் நடு மனமாகும். மேலும் இந்தப் பதிவுகள் இவ்வித்தணுக்களில் தரப் (மரபுப்) பதிவாக (Hereditary Quality) பதிவு பெறுகின்றது. இதுவே அடிமனமாகும். இந்த இயக்கத்தின் தொடராக உடலின் உயிராற்றல் அதிர்வு அலை இயக்கம் வேறுபட்டு உடல் முழுவதும் உள்ள அணு அடுக்குகளில் பதிவுகள் உண்டாகின்றன. அதுமட்டுமன்று ஒருவர் ஓர் எண்ணம் எண்ணினால் அது பிரபஞ்ச சமஷ்டி உயிரோடு தொடர்பு கொண்டு எண்ணிறைந்த மக்கள் மூளையிலும் பதிவாகின்றதோடு பிரபஞ்ச உயிரின் (Universal Soul) நிரந்தரப் பதிவாகவும் ஆகிவிடுகிறது. இவ்வாறு ஒரு தடவை ஒருவர் எண்ணும் எண்ணத்தால் ஏற்படும் உடல், மூளை, தன்னுயிர், பிற உயிர், சமஷ்டி உயிர் பதிவுகள் திரும்பத்திரும்ப பிரதிபலிப்பாகும்போது எண்ணம் தோன்றிய இடத்திலேயே அதிக ஆழமாகச் செயலாவது இயல்பு. சமுதாயத்தைப் பற்றியோ, தனிப்பட்ட பிறரைப்பற்றியோ எண்ணும் எண்ணங்கள் உரியவரிடம் அதிக அழுத்தமாகத் திரும்பத் திரும்பப் பிரதிபலிக்கும்.

பல தடவை திருவிழாவுக்குப் போகவேண்டுமென்ற எண்ணம் பிரதிபலிக்கும்போது எண்ணத்திற்கு செயலாற்றவல்ல போதிய வலு ஏற்பட்டுவிடும். இந்த எண்ணத்தால் ஏற்பட்ட உயிராற்றல், விரைவு அதிர்வு அலைகள், உடற்கருவிகளையெல்லாம் ஊக்கி எண்ணத்தை செயலாற்றத் தயார் நிலையை ஏற்படுத்திவிடும். பின்பு திருவிழாவிற்குப் போய்ப் பார்த்துக் களிக்கும் செயல் மலர்கின்றது. அதனால், இன்பதுன்ப அனுபவங்கள் பதிவாகின்றன. இவ்வாறு செயலாகப் பதித்த எண்ணம் செயலும் தேவையாக, பழக்கமாக, சூழ்நிலைக் கவர்ச்சியாக மாறி அடிக்கடி மனிதனை செயற்படுத்துகின்றன. இந்த விளக்கத்தை கொண்டு ஒரு எண்ணம் எவ்வாறு பதிவு, பிரதிபலிப்பு, செயலாற்றல், இன்பதுன்ப விளைவுகள் என்ற நான்காக மாற்றம் பெறுகின்றது என்பதை நன்குணரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் வருடாந்த விருது வழங்கல் விழா



சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் வருடாந்த விருது வழங்கல் விழா கடந்த புதன்கிழமை மதியம் 12 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுனர் சண்முகலிங்கம் கலந்து சிறப்பித்தார்.

அவர் தனது உரையில் போதிய பயிற்சி இன்றி போட்டிகளில் போட்டியிட வேண்டாமெனவும் பயிற்றுனரின் ஆலோசனைப்படியும் மத்தியஸ்தரின் கட்டுப்பாட்டிலும் போட்டியில் பங்குகொண்டால் நிச்சயம் சிறந்த வீரராக வரலாமென அறிவுரை வழங்கினார்.

# தேசிய மட்ட உதைபந்தாட்டம்

21 வயதுப் பிரிவினருக்கான தேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் 25 மாவட்ட அணிகள் பங்குபற்றவுள்ளன.

மேற்படி போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ். மாவட்ட அணி எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பு செல்லவுள்ளது.

# பாடசாலை விளையாட்டுச் சங்கம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தும் 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி டிசம்பர் மாதம் 6,7ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகளுக்கான போட்டி நிரல் தயாரிக்கும் நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பி.ப 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நீண்டகாலத்தின் பின்னர் இச்சங்கத்தினால் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளதால் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன் வெகுவிமர்சையாகவும் போட்டிகள் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் ரக்பி பயிற்சி முகாம்









பாடசாலை மாணவர்களுக்கான ரக்பி பயிற்சி பட்டறை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழில் ஆரம்பமானது. யாழ்.பாதுகாப்பு படைத் தலைமையகமும் சப்ரகமுவ ஸ்டேலியன்ஸ் ஏற்பாட்டில் ரக்பி பயிற்சி பட்டறை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. யாழ். மாவட்ட பாடசாலைகளின் ரக்பி விளையாடும் வீரர்கள் இப் பயிற்சி பட்டறையில் பங்குபற்றினர்.

கல்வி சிறந்த கல்விமான்களை உருவாக்குவது போல் விளையாட்டு ஆரோக்கியமான சமுதாயத்தினை உருவாக்கும் என்ற சிந்தனையின் மூலமும் மாணவர்களிடையே சிறந்த திறமையையும் ஆற்றலையும் வெளிப்படுத்தும் நோக்கத்துடன் யாழ். பாதுகாப்பு படைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்க சப்ரகமுவ ஸ்டேலியன்ஸ் நிறுவனப் பணிப்பாளர் வர்ண டி சில்வாவினால் மாணவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆண்கள், பெண்கள், இருபாலாருக்குமான நடைபெற்ற இப்பயிற்சி முகாமில் 70 பாடசாலை வீரர்கள் பங்குபற்றியிருந்தனர்.

யாழ். மாவட்டத்தில் இருந்து சென். பற்றிக்ஸ் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மாதகல் சென். ஜோசப், மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் ஆகிய பாடசாலை மாணவர்கள் இப்பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டனர்.

பயிற்சிகளின் போது மாணவர்களுக்கு ரக்பி விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்கள் ரக்பி விளையாட்டின் மூலம் 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்ட வேண்டுமென்றும் கூறினார்.

யாழ்ப்பாண பாடசாலை மட்டத்தில் ரக்பி போட்டிகள் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டு மிகவும் ஆர்வமாக விளையாடப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ரக்பி அணி தேசிய மட்ட ரக்பி போட்டிகளில் 12 வயதுப் பிரிவு 2 ஆம் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுக்கு எதிராக
# போராடுகிறது இங்கிலாந்து

(அகமதாபாத்)

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும் இங்கிலாந்து அணிக்குமிடையிலான நான்கு போட்டிகள் கொண்ட முதலாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் முடிவில் இங்கிலாந்து அணி சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

விக்கெட் இழப்பின்றி 111 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் ஆரம்பித்த இங்கிலாந்து அணி நேற்றைய நாள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 340 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதன்படி பலோன் முறையில் ஆடிவரும் இங்கிலாந்து அணி 5 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 10 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

நேற்றைய ஆட்டம் ஆரம்பித்து சில நேரங்களிலேயே முதலாவது விக்கெட்டை இழந்த இங்கிலாந்து அணி ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய போதிலும் அணித் தலைவர் அலஸ்ரெயர் குக்கும் விக்கெட் காப்பாளர் மற் பிரயரும் பிரிக்கப்படாத 141 ஓட்டங்களைப் பகிர்ந்து இங்கிலாந்து அணியின் போராட்டத்தை உறுதி செய்தனர்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக அலஸ்ரெயர் குக் ஆட்டமிழக்காமல் 168 ஓட்டங்களையும் மற்பிறேயர் ஆட்டமிழக்காமல் 84 ஓட்டங்களையும் நிக் கொம்ப்டன் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக உமேஷ் யாதவ், பிரக்ஜான் ஓஜா இருவரும் தலா 2 விக்கெட்டுக் களையும் ஷகீர் கான் ஓர் விக்கெட் டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 521 ஓட்டங்களையும் பதிலளித் தாடி இங்கிலாந்து அணி தனது முதலாவது இனிங்ஸில் 191 ஓட்டங் களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கங்குலிதான் எனது கதாநாயகன்
### - ஷாருகான் -



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் சௌரவ் கங்குலிக்கும் பாலிவுட் நடிகர் ஷாருகானுக்கும் இடையேயான மோதல் அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ஐபிஎல் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் அணித்தலைவராக இருந்த சௌரவ் கங்குலி இருந்த போது அந்த அணியின் இணை உரிமையாளர் ஷாருகானுடன் மோதல் மூண்டது.

இந்நிலையில் சமீபத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ஷாருகான், உலகில் தலைசிறந்த கிரிக்கெட் விளையாட்டு வீரர் கங்குலி என்று கூறியுள்ளார். பாலிவுட் உலகில் நான் கதாநாயகனாக இருக்கலாம். ஆனால் எனது கதாநாயகன் கங்குலிதான் என்று கூறி இன்ப அதிர்ச்சி கொடுத்துள்ளார்.

## டெஸ்ட் போட்டிகள் பிற்போட்டமை ஏற்றுக் கொள்ள கூடியது - மஹேல



(கொழும்பு)

இலங்கை அணி பங்குபற்றும் டெஸ்ட் போட்டிகளை இலங்கை கிரிக்கெட் சபை பிற்போடுவதை புரிந்து கொள்ளக்கூடியதாக உள்தாக இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபை அண்மைக் காலத்தில் டெஸ்ட் போட்டிகளைப் பிற்போட்டு கொண்டதோடு அவற்றிற்கு பதிலாக ஒரு நாள் சர்வதேச போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தது.

குறிப்பாக மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடர் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக இந்திய, இலங்கை, மேற்கிந்திய தீவுகள் பங்குகொள்ளும் முக்கோண ஒரு நாள் சர்வதேசப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

மறுபுறம் அடுத்தாண்டு இடம்பெறவிருந்த தென்னாபிரிக்க அணிக்கெதிரான டெஸ்ட் தொடர் 2015ஆம் ஆண்டுவரை பிற்போடப்பட்டுள்ளது.

இலங்கையின் சிறிலங்கா பிறீமியர் லீக் தொடருக்காகவே இது பிற்போடப்பட்டிருந்தது.

இந்நிலையில் கருத்து தெரிவித்த மஹேல ஜெயவர்தன, இலங்கை கிரிக்கெட் சபையின் நிதி நிலை முக்கியமானது என தெரிவித்தார்.

வீரர்களாக தாங்கள் அடுத்த 12 மாதங்களுக்கு ஊதியம் வழங்கப்படாது காணப்பட்டப் போகின்றோமா? இலங்கையின் உள்ளூர் வீரர்களுக்கு ஊதியம் வழங்கப்படாது போகப் போகிறதா? இலங்கையின் உள்ளூர்ப்போட்டிகள் நிதி நெருக்கடி காரணமாக நடைபெறாது போகப்போகிறதா இல்லை டெஸ்ட் போட்டிகளை பிற்போட்டு போட்டி அட்டவணையை மாற்றுவதா என்பதை அறிய வேண்டும் என தெரிவித்தார்.

இந்த முடிபுகள் கடினமான முடிபுகள் என தெரிவித்த மஹேல ஜெயவர்த்தன, அந்த முடிபுகள் குறித்து இரண்டு வகையான கருத்துக்கள் காணப்படும் எனவும் தெரிவித்தார்.

சிலர் அந்த முடிபுகளை விரும்ப மாட்டார்கள் எனவும் சிலர் அந்த முடிபுகளுக்கான காரணங்களை புரிந்து கொள்வார்கள் எனவும் மஹேல ஜெயவர்தன தெரிவித்தார்.

## இந்தியாவின் நிகழ்ச்சியில் இருந்து ஒதுங்கியிருங்கள்
### - இம்சமாம் -

(லாகூர்)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அடுத்த மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு 20-20 மற்றும் 3 ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் விளையாட உள்ளது.

இதற்காக பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வருகிற டிசம்பர் மாதம் 22ஆம் திகதி இந்தியா வருகிறது. முதல் 20-20 ஆட்டம் 25ஆம் திகதி நடக்கிறது.

இந்த தொடர் குறித்து பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் இன்சமாம் கூறுகையில், இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம் தனியர் விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள அதிக அழைப்புகள் வரும்.

இதற்காக பெரும் தொகை தருவதாக கூறுவார்கள். என்னை பொறுத்தவரையில் இந்த விருந்து நிகழ்ச்சிகளை விட்டு பாகிஸ்தான் வீரர்கள் ஒதுங்கியிருப்பதே நல்லது.

கேளிக்கை விருந்துகளை தவிர்த்து போட்டிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த முறை இந்திய அணியை வீழ்த்துவதற்கு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. அதனால் அனைத்து வீரர்களும் போட்டிகளில் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டும்.



இந்திய சுற்றுப்பயணம் சிறந்த அனுபவத்தை கொடுக்கும். போட்டிகளை தவிர மற்ற விடயங்களில் கவனத்தை செலுத்தாமல் தொடரை வெல்வதிலேயே முழுக்கவனமும் இருக்க வேண்டும்

இந்திய அணி வீரர்கள் இங்கிலாந்துக்கு எதிராக டெஸ்ட் தொடரில் ஆடுவதால் நல்ல நிலையில் இருப்பார்கள். அதனால் பாகிஸ்தான் வீரர்கள் கூடுதல் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

## முதலாவது இனிங்சில் இலங்கை 247 ஓட்டம்

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்ட முடிவில் நியூசிலாந்து அணி தமது இரண்டாவது இன்னிங்சில் ஒரு விக்கெட்டினை இழந்து 35 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இதில் காலி சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் முதலாவது டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித் தலைவர் ரோஸ் ரெயிலர் முதல் துடுப்பெடுத்தாட்டத்தை தேர்வு செய்தார்.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி இலங்கை அணியின் சிறப்பான பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 221 ஓட்டத்தினை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

நேற்றைய முதல் நாள் முடிபில் இலங்கை அணி தனது முதல் இனிங்சில் ஒரு விக்கெட்டினை இழந்து 9 ஓட்டத்தினை பெற்றிருந்தது. பரணவிதாரண மற்றும் ரன்தீவ் ஆகியோர் களத்தில் இருந்தனர்.

நேற்றைய இரண்டாம் நாளில் முதல் இனிங்சை தொடங்கிய இலங்கை அணி நியுசிலாந்து அணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் திணறியது.

ஆரம்ப வீரரான பரணவிதான ஓட்டம் எதனையும் பெறாமலும் ரந்தீவ் 9 ஓட்டத்துடனும் உலகின் முதல்தர வீரரும், இலங்கை அணியின் சிறப்பாட்டகாரருமான சங்கக்கார 5 ஓட்டங்களுடனும் சமரவீர 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

ஒரு கட்டத்தில் இலங்கை அணி 50 ஓட்டத்துக்கு 5 விக்கெட்டினை இழந்து தடுமாறியது.

பின்னர் 5ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனவும் உப தலைவர் அஞ்சலோ மத்தியூஸும் அபாரமாக ஆடி அணியை மீட்டு எடுத்தனர்.

இருவரும் இணைப்பாட்டமாக 156 ஓட்டத்தினை பகிர்ந்து கொண்டனர்.

ஜெயவர்த்தன 91 ஓட்டமும் மத்தியூஸ் 79 ஓட்டமும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இலங்கை அணி தனது முதல் இனிங்ஸ் முடிபில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 247 ஓட்டத்தினை பெற்றுக் கொண்டது.

பந்து வீச்சில் நியூசிலாந்து அணி சார்பில் சவூதி 4, பட்டேல் 3, போல்ட் 2, [illegible] ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.



நேற்றைய ஆட்ட நேர முடிபில் நியூசிலாந்து ஒரு விக்கெட்டினை இழந்து 35 ஓட்டத்தினை பெற்றுக் கொண்டது.

ஹெரத் ஒரு விக்கெட்டினை கைப்பற்றினார்.

களத்தில் குப்தில் 13 ஓட்டத்துடனும் வில்லியம்சன் 9 ஓட்டத்துடனும் ஆட்டம் இழக்காமல் உள்ளனர். போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்று ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவின் அறிக்கைக்கு இலங்கை பதிலளிக்காது!

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பு உரிய முறையில் கடமைகளைச் செய்யவில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் வெளியிடப்பட்ட உள்ளக அறிக்கை தொடர்பில் அரசாங்கம் இந்த கருத்தை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் உள்ளக அறிக்கை ஒன்றே வெளியிடப்பட்டுள்ளதாகவும் இதனால் இது குறித்து அரசாங்கம் உத்தியோக பூர்வமாக எந்த பதிலையும் அளிக்கப் போவதில் எனவும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்திக் கொண்ட தருணத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பு உரிய முறையில் தனது கடமையை செய்யவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மீது இலங்கை அரசாங்கம் அழுத்தங்களை பிரயோகித்ததாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இலங்கை அரசாங்கத்துடனான உறவுகள் சுமுகமாக அமையவில்லை என ஐக்கிய நாடுகளின் உள்ளக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

# மக்களை நிர்க்கதி...

விக்கப்படுகின்றது. இந்தப்பகுதியில் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தலைமையில் ஆயிரம் பழக் கன்றுகள் கடந்த வெள்ளியன்று நாட்டப்பட்டிருக்கின்றன.

இதுபற்றி கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தேசத்திற்கு நிழல் தரும் திட்டத்தின் கீழ் மரநடுகை மேற்கொள்வதையோ, பழமரத் தோட்டங்கள் உருவாக்கப்படுவதையோ தாங்கள் எதிர்க்கவில்லைஎன்றும், பொதுமக்கள் பயன்படுத்தத்தக்க காணிகளில் இராணுவத்தினர் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதையே தாங்கள் கண்டிப்பதாகவும் கூறினார்.

அவசர அவசரமாக மனிக்பாம் முகாமிலிருந்த மக்களை வெளியேற்றிய அரசாங்கம், சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதாகத் தெரிவித்து, அவர்களில் பலரைக் காட்டுப்பகுதிகளில் எந்தவிதமான அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் குடியேற்றியிருக்கின்றது. அவ்வாறு செய்துவிட்டு மனிக்பாம் முகாமை இராணுவம் தனது விவசாயச் செய்கைக்காகப் பயன்படுத்துகின்றது.

இது மனிக்பாம் முகாம் பிரதேசத்தின் ஆறாயிரத்து இருநூறு ஏக்கர் காணிகளையும் இராணுவம் கைப்பற்றுவதற்கான உள்நோக்கம் கொண்ட செயலாகவே தாங்கள் கருதுவதாகவும், அதனைக் கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ந-11)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 1927 - 12 - 12



உதிர்வு 2012 - 10 - 20

### திருமதி செல்லையா கமலாம்பிகை

*"தாயுமாகி தந்தையுமாகி எங்களை வாழவைத்த தெய்வமே ! எங்கள் உடலில் உயிரும் உணர்வும் இருக்கும் வரை இதயத்தில் உங்களை நிறுத்தி பூஜித்துக் கொண்டே இருப்போம்"*

கடந்த 20.10.2012 அன்று இறைபதமெய்திய எமது அன்னையின் எதிர்பாராத மறைவினால் நாம் அதிர்ச்சி அடைந்து நின்றபோது ஓடோடிவந்து சகலவழிகளிலும் பேருதவி செய்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் இரங்கலும் ஆதரவும் தெரிவித்த உள்நாட்டு வெளிநாட்டு உறவுகளுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன்,

இன்று (19.11.2012) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக் கரையில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் (21.11.2012) புதன்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் மற்றும் மதிய போசன நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

20, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
நி.மு.: 6-ம் வட்டாரம், மண்டைதீவு.

மகன் : செ. நாகரெத்தினம்
மற்றும் குடும்பத்தினர்.

(993)

# முஸ்லிம்களுக்காக விரைவில் சட்டமூலம் - ஹக்கீம்

(கொழும்பு)

முஸ்லிம் தனியார் திருத்தச்சட்ட மூலம் விரைவில் அமுல்படுத்தப்படும் என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கையில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர் எனினும் இந்த திருத்த சட்டமூலத்தை அமுல்படுத்துவதற்கான பூரண அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

எமது மூதாதையர்களினால் இந்தச்சட்டம் பல தசாப்தங்களுக்கு முன்னர் எமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இது எமக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும் எனவும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவித்தார்.

எனினும் இந்த சட்ட மூலத்தில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. இதனை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே இந்த சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு உயர் நீதிமன்ற நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார். (ந-11)

# பட்ஜெட்டின் இரண்டா...

பிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியிருந்ததை அரசாங்கம் கருத்தில் எடுக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு அமைச்சுக்காக உள்ள நிதியை இன்னொரு அமைச்சுக்காக ஒதுக்குவது என்பது நாடாளுமன்றத்தின் அனுமதியுடன்தான் மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக, நீதியரசர் ஷிராணி திலகவர்த்தன இந்த வழக்கு மீதான விசாரணையின்போது உதாரணமொன்றைக் சுட்டிக்காட்டினார்.

அதாவது கல்வி அமைச்சுக்கான நிதியை ஏனைய அமைச்சுகளுக்கு மாற்றிவிட்டால் நாட்டின் இலவசக்கல்வி பாதிக்கப்படும். எனவே நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்துக்கு திருத்தம் தேவை என்று கூறப்பட்ட போதிலும் அரசு அதனை செய்யாமல் வரவு செலவுத்திட்டத்தின் 2-வது வாசிப்பை நிறைவேற்றிவிட்டது. இப்படிச் செய்வது அரசியலமைப்புக்கு முரணானது என்று உச்சநீதிமன்றமே கூறியிருக்கின்றது என்று ரணில் கூறியுள்ளார்.

கொழும்பு மாநகர மேயரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நடந்த இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்த வரவு செலவுத் திட்டம் மக்கள் ஆணைக்கு விரோதமானது என்றும் கூறினார்.

உச்சநீதிமன்றத்தின் தீர்மானத்தின்படி, இந்த வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்ற முடியாது. அது எமது அரசியலமைப்புக்கு முரணானது. அதாவது நாட்டு மக்களின் ஆணைக்கு முரணானது. அதனை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவர முடியாது. அத[illegible]கான வாக்கெடுப்பில் நாங்கள் ஈடுபட முடியாது என்ற ரணில், அரசாங்கம் சட்டத்துக்கு முரணான வகையில் வரவு செலவுத்திட்டத்துக்கு நிதி சேகரிக்க முனைவது ஒரு கப்பம் பெறும் நடவடிக்கை என்று கூறினார். (ந-11)

# பரிதி கொலையில்...

உயர் ஸ்தானிகராலயம், அதனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த ஒருவருக்கு தெரிவித்திருந்ததாக மேற்படி பெரிஸியன் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தச்செய்தியை வெளியிட்ட ஊடகவியலாளர் ஸ்டெபன் செலாமியை சந்திக்க தான் பல முறை முயற்சித்த போதும் அது பயனளிக்கவில்லை என்று உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் உள்ளக பிரச்சினை காரணமாகவே பரிதி என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று பிரான்ஸ் பொலிஸார் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில், இந்தப் படுகொலையுடன் தொடர்புடையதான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இரு சந்தேகநபர்களும், இலங்கை உயர் ஸ்தானிகராலயம் தொடர்பில் குறித்த பத்திரிகை வெளியிட்ட செய்தியைப் போன்றதொரு தகவலை பொலிஸாருக்கு தெரிவித்திருக்கவில்லை என்று உயர்ஸ்தானிகர் ஜயதிலக்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

# ஐ.நா.அறி...

பொறுப்புக்கள் தொடர்பில் நான் தொடர்ந்து அவதானம் செலுத்தி வருகின்றேன்.

இந்த அறிக்கையானது இறுதி யுத்தத்தின் போது ஐ.நா மற்றும் அதன் தொண்டு நிறுவன[illegible]களின் இயலாமையை சுட்டிக்காட்டியுள்ளது.

இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படாமல் இருக்கவும் எதிர்கால தோல்விகளை தடுப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பிலும் பரிந்துரைத்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ந-11)

# பிரதம நீதியரசரின்...

என பாராளுமன்றத் தெரிவுக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்னிலையில் நீதியரசரை ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்த விசாரணைகளில் கலந்து கொள்வதற்கு போதியளவு கால அவகாசம் வழங்குமாறு பிரதம நீதியரசர் கோரியிருந்தார்.

எனினும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என நாடாளுமன்றத் தெரிவுக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டத்தரணியின் ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டதனால் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், கால அவகாசம் தேவையென்றால் பிரதம நீதியரசர் நேரடியாக அனுமதி கோரியிருக்க வேண்டுமென பாராளுமன்றத் தெரிவிக்குழு குறிப்பிட்டுள்ளது. (ந-11)

# யுத்தக்குற்றச்செயல்...

சமூகத்தினால் நிறைவேற்றப்பட்ட எந்தவொரு தீர்மானத்தையும் இலங்கை அரசாங்கம் பொருட்படுத்தவில்லையென குற்றம் சுமத்தியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் தொடர்ந்தும் தமிழர் பிரதேசங்களில் அதிகளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான ராஜதந்திர கொள்கைகளில் இந்தியா மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-2)

# ஐ.நா.மனித உரிமை...

நெருங்கிய நட்பு நாடுகளான சீனா, ரஷ்யா, கியூபா ஆகிய நாடுகள் அடுத்தாண்டில் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்க மாட்டாது.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் இடம்பெறவுள்ளது.

இதன்போது இலங்கைக்கு எதிராக கடந்த மார்ச் மாதம் அமெரிக்கா கொண்டுவந்து நிறைவேற்றிய தீர்மானம் தொடர்பில் எட்டியுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தில் நட்பு நாடுகளின் ஆதரவு இல்லாத இலங்கை கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என அவ் ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், இம்முறை பாகிஸ்தான் தெரிவாகியிருப்பது மட்டுமே, இலங்கைக்கு ஆறுதலளிக்கக் கூடிய ஒரே விடயம் என மேலும் குறிப்பிட்டுள்ளது. (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.